MASTER NEGATIVE NUMBER

6151.13

தனவைசிய ஊழியன்

மலர் 3, இதழ் 40

June 22, 1923

Record no. 148

Taṉavaiciya ūḻiyaṉ

Malar 3, itaḻ 40

June 22, 1923

Record no. 148

சிவமயம்.

சென்னை பதிவு எண் [illegible] | தந்திவிலாசம்:— "Oolian"

தனவைசிய ஊழியன்

தனவைசிய ஊழியர் சங்கத்தினின்றும்

வெள்ளி தோறும் வெளிவருவது.

ஆசிரியர்:— ராய. சொக்கலிங்கம்.

[illegible] வெள்ளு [illegible] தெய்வம் / மடி [illegible] —[illegible] | [illegible] —[illegible]

மலர் ௫. [illegible] ருத்ரோத்காரி வரு ஆனி ௺ அ (௨௨—௬—௧௯௨௩) இதழ் [illegible].

கோஹினூர், அல்லது வைர மணி.

இந்தியாவின் பிரசித்திபெற்ற வைரம்.

ஜோஹான்ஸ்பர்க்கில் வெளியாகும் "திஸ்டார்" என்னும் பத்திரிகை சொல்லுகிறது:—

மணியின் பூர்வசரித்திரம்.

இம் மணியை மலைக்கர்க்கியென்றும் கூறுவர். பழையகால சரித்திரங்களின் [illegible] அந்த ஆபரணமானது சுமார் ௫000 ஆண்டுகட்கு முன்னர் கோதாவரிக்கரையில் அகப்பட்டதென்று சொல்லுகின்றனர். அந்த ஆபரணத்தை இந்தியதேச [illegible] அதனுடைய அழகுக்காகவும் காந்திக்காகவும் [illegible] பாராட்டியும், அதனது அற்புதச் செயல்கட்காகப் பக்தி பாராட்டிக்கொண்டும் ஆதரித்து வந்தார்கள். இந்த ஆபரணத்தை அணிந்து கொண்ட அம்மன்னர்கள் நீதிமுறை வழுவாது [illegible] பொருந்திய சிம்மாசனங்களில் வீற்றிருந்து செங்கோல் [illegible] அரசு புரிந்து வந்தார்கள். இவர்களிற் [illegible] விக்கிரமாதித்த மகாராஜா இதனை மிகவும் பயபக்தியுடன் காப்பாற்றி அணிந்து அநேக அற்புதங்களைச் செய்திருக்கின்றார். பின்னர் குறிப்புகளால், இந்த ஆபரணம் [illegible] அரசாங்கத்தை ஸ்தாபித்த [illegible] அரசருக்குச் சொந்தமாயிற்றென்று தெரிகின்றது; [illegible] பேர் மஹா [illegible] அது [illegible] அரண்மனையிலேயே தங்கியிருந்தது. பதினோராம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பிரதம [illegible] என்பவர் இந்த நகையைக் கண்டு [illegible] [illegible] என்றும் [illegible] [illegible] என்றென்று அறிவித்திருக்கின்றார். அப்போது அவுரங்கசீப் ஆண்டு கொண்டிருந்தான். பின்னர் அவ்வம்சத்தைச் சேர்ந்த [illegible] என்னும் அரசன் இந்த நகையைத் தலைக்குடையில் அணிந்து வைத்துக் காப்பாற்றியிருந்தான். பின்னர்

இந்தியாவிற் படையெடுத்துவந்த நாதர்ஷா என்னும் ஆப்கன் டெல்லி ராஜ்யத்தை வென்று கொள்ளையிட்டபோது இந்த மணியையும் அபகரித்துச் சென்றான். பிறகு, அவ்வாபரணம் பரம்பரையாக ஆப்கன் வம்சத்து அரசர்களாகிய [illegible] வுக்குச் சொந்தமானது.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் இந்த ஷாஹூஜா [illegible] மகம்மது [illegible] பயத்தினால் அவர் (௧௮௧௩) [illegible] இந்திய [illegible] [illegible] [illegible] [illegible] அடைக்கலம் புகுந்தான். ரஞ்சித் [illegible] அந்த ஷாஷூஜா [illegible] இருந்த அந்த அரிய ஆபரணத்தைப் பறித்துக்கொண்டான். ரஞ்சித் [illegible] அந்த ஆபரணம், [illegible] ஆபரணமென்றும், [illegible] [illegible] பூஜை [illegible] அதனைப் [illegible] அநேக அற்புதங்களைக் காட்டுமென்றும் தெரிந்தவனாதலால், அதனை ஒரு [illegible] பந்தனமாகவே அணிந்து போற்றி வந்தான். தனது கையில் [illegible] அதை அணிந்தவனாய்த் தான் செல்லுமிடங்கட்கெல்லாம், மிக ஜாக்கிரதையுடன், முன்னும் பின்னும் தக்க வீரர்கள் புடைசூழ, ஒரு [illegible] பெட்டியில் பட்டு மெத்தையில் பதித்து வைத்து எடுத்துப்போவது வழக்கம்.

௧௮௫0 ஆம் ஆண்டு [illegible] மாதம் [illegible] அந்த அரிய ஆபரணமானது விக்டோரியா (விக்டோரியா) மஹாராணிக்குப் பரிசாக அளிக்கப்பட்டது. அப்போது அது மிகவும் [illegible] அதனைப் [illegible] பார்க்க நேர்ந்தது. ஸர் [illegible] என்னும் பிரசித்தியுடைய வேலைக்காரன் அதனை [illegible] வேலைசெய்து ௯000 [illegible] அவன் செவ்வில் சிப்பமிட்டிருந்தான். [illegible] பிறகு அது முன்னை விடப் பதின்மடங்கு காந்தியுடையதாய் விளங்கிற்று. [illegible] வருஷத்தில் அதனைக் காட்சிச்சாலையில் வைத்து எல்லோர்க்கும் காண்பித்தார்கள்.

[illegible] இவ் ஆபரணத்தைச் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அந்த ஆபரணத்தைக் [illegible] வருத்தம் [illegible] இப்படியிருந்து [illegible] வருகின்றாயினும், [illegible] இருந்ததாயினும் அந்த நகையை விக்டோரியா மகாராணிக்கு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அதைக் கண்ணில் [illegible] [illegible] [illegible] இல்லையாம்.

அந்த சிறிய அரசர் அந்த ஆபரணத்தின் மீது மிகுந்த நம்பிக்கையும் பக்தியுங் கொண்டு [illegible] பற்றியும் அதனது [illegible] தன்மையைக் கண்டு அறிந்த விக்டோரியா மகாராணியார் அவ்வரிய ஆபரணத்தைத் தாம் வைத்துக் கொள்ள மறுத்து, மறுபடியும் அதனை இந்தியாவிலுள்ள [illegible] அளித்துவிட [illegible] ஆங்கில அதிகாரிகளிடம் சேர்ப்பித்தனர். அச்சமயம் தான் ஆங்கிலர் [illegible] [illegible] பிரிட்டிஷ் ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டனர்; ஆகலால், ஆங்கில அதிகாரிகள் அவ்வாபரணத்தைத் திருப்பிவிட மனமொப்பாதவர்களாய் இருந்தார்கள். ஆனை [illegible] திருப்பப்படாமலே இருந்தது. அச்சமயம் ஆங்கிலப் படைகட்குத் தலைவராகவும் பொலிடிகல் அதிகாரியாகவுமிருந்த ஸர் ஜான் லாரின், அந்த ஆபரணத்தைப் பற்றி மிக்கக் கவலையும் கருத்துங் கொண்டு, அதனைக் காப்பாற்றுவதற்குத் தமது சட்டைப் பையில் மிகுந்த பொறுப்புடன் [illegible]

யுத்தேசித்து, அதனை யிங்கிலாந்துக்கு எடுத்துச் செல்வதற்காக லார்டு டல் ஹௌஸியிடம் கொடுத்தனுப்பினர். இங்கிலாந்துக்கு எடுத்துக்கொண்டு சென்ற போது அதனைக் காப்பதற்குப் பெருத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. லேடி டல்ஹௌஸியினால் செய்யப்பட்டதொரு தோற்பையில் அவ்வாபரணத்தைப் போட்டு, இடுப்பின் (பெல்டில்) அரைக் கச்சையிற் கட்டிக்கொண்டு, அவ்வரைக் கச்சையில் ஒரு சங்கிலியைக் கோத்துக் கழுத்தில் மாட்டிக்கொண்டிருந்தார். அது இங்கிலாந்து போய்ச் சேருமளவும் லார்டுடல் ஹௌஸிக்குத் தூக்கமேயில்லையாம். நல்லவேளையாய் வெகு ஜாக்கிரதையுடன் இவ்வாபரணத்தைக் கொண்டு வந்து சேர்த்தது, தம்முடைய நக்ஷத்திர பலந்தானென்று அவர் கூறினாராம்.

இத்தகைய தெய்வத் தன்மையுள்ள விலையுயர்ந்த பரம்பரை யிந்திய அரசாங்க நகையானது, தற்போது, இங்கிலாந்தில், மற்றைய கண்காட்சி நகைகளுடன் லண்டன் நகரத்திலுள்ள டவர் என்னும் மாளிகையில் வைக்கப்பட்டிருக்கின்றது.

"மஹாஜன நேசன்"

தமிழ்நாட்டுக் கூட்டம்.

(ஒரு நிருபரிடமிருந்து)

கூட்டம் உண்டா இல்லையா என்று சந்தேகிக்கப்பட்ட தமிழ்நாட்டுக் கூட்டம், காரியதரிசிகள் குறித்தவாறே மதுரையில் ஆனிமீ௳ க, உ-௳ களில் சிறப்புற நடந்தேறியது. தலைவர் ஸ்ரீமாந், ச. ராஜகோபாலாச்சாரியார் கூட்டத்தை நிறுத்தும்படி உத்தரவிட்டார் என்ற செய்தி பொய்யென்பதை அவர் அக் கூட்டத்திற்கு வந்திருந்து நடாத்தியதே சொல்லும். கூறினாலும், கூட்டத்தைத் தள்ளி வைக்கும்படி காரியதரிசிகளுக்குத் தலைவர் எழுதினாராம். காரியதரிசிகள் குறித்தவாறு நடத்தவேண்டியது அவசியமெனத் தெரிவித்துக் கூட்டத்தை நிச்சயித்து விட்டனர். தலைவரும் வந்துவிட்டார். இதற்கு மத்தியில் வைத்தியர் வரதராஜலு நாயுடு அவர்கள் தாம் உபதலைவர் என்ற முறையில் கூட்டத்தை நிறுத்திவிட்டதாகவும் அங்கத்தினர் யாரும் மதுரைக்கு பிரயாணமாக வேண்டாமென்றும் பத்திரிகைகட்குத் தந்தியனுப்பினர். எனினும் அதைப் பொருட்படுத்தாது கூட்டம் கூடிவிட்டது. பல தீர்மானங்கள் செய்தது. அவற்றுள், சில தீர்மானங்கள் வருமாறு:—

க. பம்பாயில் கூடிய எல்லா இந்திய தேசியசபைக்கூட்டம் செய்த, "சட்டசபைப் பிரவேசத்திற்கு எதிர்ப் பிரசாரஞ் செய்வதில்லை" யென்ற தீர்மானத்தைத் தள்ளி, கயையில் தேசீயமகாசபை செய்த தீர்மானத்தை உடனே அநுஷ்டானத்தில் நடாத்தி வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தல்.

உ. இவ்வாண்டு டிசம்பரில் காக்கினாடாவில் கூடவிருக்கும் தேசிய மகாநாட்டிற்கு மௌலானா மகமத்தாலியைத் தலைவராக்குமாறு சிபார்சு செய்தல்

௩. நிர்மாண வேலையிலும் பிற வேலையிலும் சட்டமறுப்புச் செய்ய நேருமானால் உடனே செய்தல்.

௪. திருவாளர் வயிசு. ஷண்முகஞ் செட்டியார் ராஜிநாமா அங்கீகரிக்கப் பெற்றது.

௫. ஸ்ரீ திலகர் ஸ்வயராஜ்ய நிதிக்காக வசூல் செய்யப்பட்டு ஸ்ரீமாந் கஸ்தூரிரங்கய்யங்காரிடம் இருக்கும் பணத்தை வாங்கி பொக்கிஷதாரிடம் சேர்த்தல்.

வேறு சில தீர்மானங்களும் செய்யப் பெற்றன.

சட்ட சபைப் பஹிஷ்காரச் செலவுக்கு தேசீய சபைப்பணத்தைச் செலவிடக் கூடாதென ஒருவர் கொண்டுவந்த தீர்மானம் பலமாக அடிக்கப்பட்டுத் தோற்றுப் போயிற்று.

களவு யாது.

இது பஞ்ச மகாபாதகங்களுள் ஒன்று என்பதும் இகபர மிரண்டிலும் மிகத் துன்பத்திற்குள்ளாக்குவதென்பதும் உலகறிந்ததாதலால் இதன் பலாபலன் விரிப்பின் விரிவஞ்சிப் பாகுபாட்டைக் கூறுகின்றேன்.

ஒருவர் பொருள் வைத்தவிடத்து தெரியாதபகரித்தோ, கன்னக்கோல் வைத்து வௌவுதல் மாத்திரமோ, களவென்று சிலர் கருதுவது தவறு. களவுக்கு இலக்கணம் ஒருவற்குரிய பொருளைத் தெரியாதபகரித்தல் என்று முடியும். அதை ஒருவாறாகச் சுருக்கி விளக்குவாம்.

ஓர் வியாபாரஞ் செய்யுங்கால் வியாபாரி தவறுதலாகப் பண்டம் அல்லது பணம் அதிகமாகத் தந்துவிட்டால் திருப்பிக் கொடாதிருத்தலும், கணக்குப் பார்க்குமிடத்து எதிரி காலணாத் தவறிவிட்டால் நாம் தெரிந்து பேசாதிருத்தலும், கண்டெடுத்த பொருளை உடையவருக்குச் சேர்ப்பியாதிருத்தலும், இருவருக்குப் பாத்தியமுள்ள தலத்தில் தெரியாது இடம் அதிகம் சேர்த்துக் கொள்ளுதலும், ஒருவனுக்குப் பண்டம் வாங்கி ஒட்டுதல் போடுதலும், ஒருவருக்கு ஏஜண்டாக விருந்து உதிரிலாபத்தைக் கணக்கில் காட்டாது செலவு செய்தலுங் களவாகவே முடியும். இப்படி அனந்தம், வர்த்தமானத்தில் நடந்து வருகிறது.

பாதகங்களுள் பஞ்ச மாபாதகங்கள் தலை சிறந்தனவாய் நிற்கின்றன. களவோ, உலகத்தாரால் கடுந்தண்டனைக் குட்படுத்துவதாயுமிருக்கின்றது. பரத்திலோ, கும்பீபாகமென்னும் நரகத்திற் காளாக்குகிறதாதலால் பிறர் பொருளெட்டியேயெனக் கொண்டு பிறருரிமைப் பொருளை எவ்வழியானுங் கொள்ளாது அறிவாலறவே நீக்கவேண்டும்.

ஊன்றிப் பார்க்குங்கால் களவுக்கு இன்னுமொரு பொருள் கொள்ளக் கிடக்கின்றது. அதைக்கூறுவாம்:— பஞ்ச பூதங்களும், அதிலடங்கிய சராசர முற்றும் இறைவனால் ஆக்கியளிக்கப்பெற்று வருகிறதென்பதும், அதற்குத் தலைவன் அவனே என்பதும் ஆக்ஷேபமில்லாதெல்லாருமொப்ப முடிந்தது. எண்ணரிய யாக்கைகளிற் பிறந்திறந்துவருந்திய ஜீவர்கள் பிறவித் துன்பஞ் சகியாதுமிகத் தபசுற்று, மானிட உடற்றந்தால் யானுனை மறக்காது சேடனாவேனென இரங்கிக் கேட்டுப் பரமனுதவிய மக்கள் யாக்கையைப்பெற்ற நாம், வினையின் பயனால் வந்த உடல் பொருள் மனைவி மக்கள் ஆனைசேனை முதலியவற்றை ஆண்டவன் பொருளென மதித்து விந்தவாறெண்ணி நல்வழிச் சென்று, அறவழி நின்று அம்மை பாகனுக்கன்புண்டாகுமாறு நடக்கவேண்டும்.

ஒரு முதலாளிக்கு ஓர் அடிபன் இருப்பானாகில், அவன் செய்யும் ஒவ்வொரு காரியமும் முதலாளியுடைய பொருளென்பதையுன்னி எவ்வளவு ஜாக்ரதையா இருப்பானோ, அவ்வளவு உஷாராகவிருத்தல்வேண்டும். இல்லையேல், முதலாளிக்குத் துரோகம்பண்ணிய ஒருவன் இகபரத்தில் எத்துன்பமடைவனோ, அதற்கனந்தமாகக் கடவுள் துரோகஞ் செய்தவனும் அனுபவிப்பான்.

மேற்கூறியவகையில் முற்பொருள் சிறியது; ஏகதேசமுள்ளது; சிலரிடமிருப்பது; அறிவால் நீங்கப்பெறுவது. பிற்பொருள் பெரியது; வியாபகமுள்ளது; பலரிடமிருப்பது; பார்வதிபாகனிடஞ் செலுத்தும் பக்தியால் நீங்கப்பெறுவது.

சுப. ராம. கந்தசாமி,
கடியாபட்டி.

பெண்கள் உலகு.

சாமான் சேர்த்தல்.

நமது தனவைசியப் பெண்கள் உலகம், இந்நாள் செய்து வரும் முக்கிய வேலை சாமான் சேர்த்தல் என்ற ஒன்றே. இதைக்காட்டினும் முக்கியமான வேறொருவேலை நமது பெண்கட்கு இந்நாள் இல்லையென்று திட்டமாகக் கூறலாம். சுருங்கச் சொல்லுமிடத்து நமது பெண்கள், தாங்கள் இப்பரந்த உலகில் படைக்கப்பட்டது சாமான் சேர்த்தற்கே என்றே எண்ணுகின்றனர். பிற உலக லௌகீக வைதீக விஷயங்கள்யாவும் பின்னேதான். பெண்கட்குரிய இன்றியமையாக் கடமையைப்பற்றிய கவலையுள்ள பெண்கள் நமது சமூகத்தில் உண்டோவென்பது சந்தேகமே. பிறவிப் பேறே சாமான் சேர்த்தல்தான் எனக்கருதுவார்களானால், வேறு எந்த வகுப்புப் பெண்களும் சாமான் சேகரிப்பதில் இவர்கட்கு இணையாக மாட்டார் என்று சொல்லவாவேண்டும்?

இதற்கும், பெண்கள் செய்யும் இதுபோன்ற பிறவுக்கும் பெண்களை மட்டும் குறைசொல்லிப் பயனில்லை. எல்லாவற்றிற்கும் கல்வியறிவும் உலக ஞானமும் இல்லாமையே காரணங்கள். அவர்கட்கு இவற்றைத் தரவேண்டுவது ஆடவர். ஆடவரே பலரும் இவற்றைப் பெறாதிருக்கும் போழ்து பெண்கட்குத் தரத் தவறிவிட்டது ஆச்சர்யமாகாது. யாரைச் சொல்லி யென்செய்வது! எல்லாம் ஈசன் செயல்தான். நிற்க, சாமான் சேர்க்கும் விஷயத்தைக் கவனிப்போம்.

நமது பெண்கள் சாமான் சேர்க்கும் நிலையையும் சேர்க்கும் பொருட்டு அநுபவிக்கும் சிரமத்தையும் எதற்காகச் சேர்க்கின்றனர் என்பதையும் சேர்த்து அவற்றை என் செய்கின்றனரென்பதையும் அவை எந்நிலையடைகின்றன என்பதையும் நோக்கினால் அறிஞர்க்கு வியப்பாகவும் வருத்தமாகவுமே தோன்றும். சாமான் சேர்க்கும் நிலை பெரிய அறியாமையுடையதாகவிருக்கும். இந்தச் சாமானை நாம் எதன் பொருட்டு வாங்குகின்றோம்; இது நமக்குத் தேவைதானா என்பதைப்பற்றி யோசிப்பதே கிடையாது. எந்தச்சாமானை விருந்தபோதினும் கண்ணுக்கு முன்னே தோற்றுவதை வாங்கிவிட வேண்டும். மற்றொரு பெண் வாங்கினால் அதனைத் தான் வாங்காவிட்டால் கண்டிப்பாக இரவுமுழுமையும் உறக்கம்வாராது. இப்படியாக ஒருவரோடொருவர் பங்கு போட்டுக்கொண்டு என்ன விலை சொன்னபோதினும் கொடுத்து வாங்கிவந்து வீட்டில் அடைந்துவிட வேண்டும். வீட்டின் அளவு, ஒவ்வொன்றும் எவ்வளவு ஆயிரங்கட்குச் சாமான் வாங்கின போதினும் அடையக் கூடியதாகவே யிருக்கும், வீடுகட்டும் பொழுதே, மனிதர் வசிப்பதற்கென்ற நோக்கம் இம்மியும் இல்லாது, காற்றை உள்ளே பிடித்து விட்டாலும் நுழையாதபடியாக சாமான் அடைப்பதற்கென்றுதானே கட்டப்படுகிறது! யாரேனும் இந்நாட்டிற்குப் புதியமுறையாகக் காற்றோட்டங்களை நிறைய வைத்து ஒரு வீடு கட்டினால் ஒருகாலும் ஆயுளுக்குள் தேவை வராதபாழும் சாமான்களைப் போட்டு அடைக்க வேறு இடம் வேண்டியதாகிறது. அவ்வளவு சாமான்கள் அர்த்தமின்றிச் சேர்க்கப்படுகின்றன.

இச்சாமான் சேர்ப்பதற்கு எடுத்துக் கொள்ளும் சிரமத்தையும் இதனால் நேரும் மரியாதைக் குறைவையும் எடுத்துரைக்க முடியாது. நம் நாட்டில் திருவிழா என்ற களியாட்டு ஊர் தவறாது அநேகமாக நடக்கும். கழிபட்ட உபயோகமில்லாத சாமான்களெல்லாம் அக்களியாட்டயரும் இடங்களில் இறக்குமதி ஆகிவிடும். நமது பெண்கள் திரள்திரளாக ஆங்குக் (அக்கடைகளில்) கூடிவிடுவார்கள். ஒரு ஊரில் களியாட்டு நடக்கிறதென்றால், தெருக்கள் முழுமையும் அலுமினியம், பித்தளை, இப்பம், ஜாடி, மங்கு, பீங்கான், இரும்பு, மண் சட்டி பானை முதலியன நிறைக்கப்பட்ட கடைகளே மலிந்து கிடக்கும். அக்கடைகளினுள்ளும் வெளியும் தெருவுமெழுங்குள்ள ஆடவர் நுழைய இடமின்றி, மிகச் சிறுபெண்கள் முதல் சமீபத்தில் சாகப்போகும் வயோதிகப் பெண்கள் ஈறாக, தந்தமக்கேற்றபடி ஜதை ஜதையாக அணி வகுக்கப்பட்டு அடைக்கப்பட்டிருக்கும். அங்குபோய்ச் சற்றுநேரம் நின்று பார்த்தால், பிற எது எப்படியாயினும் சாமான் சேர்த்தலில் அவர்கட்கிருக்கும் ஆர்வம் இனிது விளங்கும். ஒரு சாமானைச் சட்டென்று எடுக்கவும் மாட்டார்கள். ஒருசட்டி வாங்குவதென்றால் நூற்றுக்கணக்கான—ஏன்? அக்கடையிலுள்ள சட்டிகள் முழுமையுங்கூடப் பரிசோதித்தாலன்றி மனந்தெளியாது. ஒரு கடையிலிருந்து அடுத்தகடைக்கும் அங்கிருந்து மற்றொரு கடைக்கும் ஓடிபோடியலைதல் ஒரு வேடிக்கையாகவிருக்கும். பண்டைநாளில் வெளியிற் செல்லாது கோஷா மாதிரி வீட்டினுள்ளிருந்த நமது பெண்களின் நிலையும் இந்நாள் ஊரூராய்த் தெருத்தெருவாய்க் கடைகடையாய்த் திரிந்தலைந்து மதிப்பைக் கெடுத்துக் கொள்ளும் நமது பெண்களின் நிலையும் ஒப்பிடுந் தரத்ததோ? இப்படியாகச் சாமான் சேர்க்கின்றனர்.

இன்னும், சென்னை முதலிய நகரங்கட்குச் சாமான் வாங்குவதற்கென்றே செல்கின்றனர். மதுரையில் மண்பானை சட்டி வாங்கி இயந்திர வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்து அல்லற்படுகின்றனர்.

ஏன் இப்படிச் சாமான் சேர்க்கின்றனர்? என்று பார்ப்போம். பெரும்பாலும் பெண்ணுக்கு வைப்பதற்கென்ற ஒன்றுகொண்டுதான் என்று விடைபகரலாம். அதாவது:- பெண்ணுக்குச் சீர்கொடுப்பதற்காக. ஒரு பெண் பிறந்தது முதலே அப்பெண்ணிற்குச் சீர்கொடுப்பதற்குச் சாமான்கள் சேகரிக்கப்படுகின்றன. நாளடைவில் சேர்க்கப்பெற்று அப்பெண்ணின் மணக்காலத்தில் வீடு நிறைய சாமான்கள் குவிந்து விடுகின்றன.

இவைகள் கல்யாண காலத்தில் பெண்ணுக்குச் சீராகவைக்கப்பெறுகின்றன. ஒரு பெண்ணுக்குச் சீர் கொடுக்கும் சாமான்களைச் சுருக்கமாக எழுதுவதென்றாலும் எத்தனை பக்கங்கள் வேண்டுமென்பதைக் கணக்கிட்டுரைக்க முடியாது. உலகத்திலுள்ள சாமான்களில் தங்கள் (பெண்கள்) கண்ணுக்குத் தெரிந்த சாமான்களுள் எதையும் பாக்கிவிட மாட்டார்கள். எல்லாம் அங்கு வந்து கல்யாண வீட்டில் வந்தவர்கள் பார்ப்பதற்காகக் கண்காட்சியாகப் பரப்பப்படும். ஒவ்வொரு கல்யாணத்திலும் இப்படியே. கடைகளில் இவ்வளவு அலங்காரமாகச் சாமான்களைப் பார்க்க முடியாது. அவ்வளவு சாமான்கள் வீடு முழுமையும் இடமின்றிப் பரப்பப்பட்டிருக்கும். ஒரு பக்கம் அடுக்கடுக்காக வெள்ளிச் சாமான்கள்; மற்றொரு பக்கம் பித்தளைச்சாமான்கள் ஐம்பத்தொரு அறுபத்தொரு அடுக்குகளும் அவற்றிற்குத் தகுந்த பிறவும்; இன்னொரு பக்கம் பெரிய பீரோ, சின்ன பீரோ, கடுப்பீரோ முதலிய எண்ணிறந்த மரச்சாமான்கள்; பின்னொரு பக்கம் இரும்புச் சட்டிகள் முதலியன; பிறிதொரு பக்கம் அலுமினியம், மங்குச்சாமான் ஜாடி, பீங்கான் வகையறா; வேறொரு பக்கம் மெத்தை தலையணை பாய் எடுபிடிவகையறா; கொடிக்கயிற்றில் சேலைகள் ஒரு பால் தொங்கும்; மண்பாண்டங்கள் ஒரு பாற் குவிக்கப்பட்டிருக்கும்; இவற்றை யெல்லாம் விடுத்து ஒரு பக்கம் திரும்பினால் அண்டாக்களில் அளந்து வைக்கப்பட்டிருக்கும் தீனிப்பொருள்கள் புதிதாகப் பார்ப்பவர்கட்குப்

(௬ம்-பக்கம் பார்க்க)

உலக நிகழ்ச்சி.

மகாத்மா சிறை சென்று இன்றோடு ௪௯௨ நாட்களாகின்றன. வருஷம் ௧. நாட்கள் ௯௯.

* * *

ஆங்கில—ஆப்கன் வியாபார ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டதாகத் தெரிகின்றது.

* * *

ஒரு சதுர அடியளவுள்ள தேன் கூட்டில் ௯000-அறைகள் இருக்கின்றனவாம்.

* * *

ஒரு ஆண் முயலும் பெண் முயலும் கூடியிருந்தால், நான்கு வருஷங்கட்குள் அவற்றின் ஸந்ததி பத்துலட்சமாகின்றனவாம்.

* * *

ஒரு ஸாதாரண மனிதனுடைய சுவாஸ கோசத்தில், ௭௯,000,000 காற்றறைகளிருக்கின்றன வென்று கணக்கெடுத்திருக்கின்றார்கள்.

* * *

மசூலிப்பட்டணம் தோட்டிகட்கு இராப்பள்ளிக்கூடம் ஒன்றை ஸ்ரீமான் வி. ரங்கராவ் தக்க முயற்சியினால் ஏற்படுத்தியிருக்கின்றார்.

* * *

பூகோளசாஸ்திர சங்கத்தார் மறுபடியும் ௧௯௨௪-வருஷத்தில் இமயத்திலுள்ள எவரஸ்ட் சிகரத்தில் ஏறத் தீர்மானித்திருக்கின்றார்களாம்.

* * *

ஜப்பானில் ஜனத்தொகை அதிகமாகி விட்டதால், அந்நிய நாட்டார் இனி அங்குவந்து குடியேறும் விஷயம் நிதானிக்கப்பட்டுவருகின்றதாம்.

* * *

அமிர்தஸரஸிலுள்ள இந்துக்களும் மகம்மதியர்களும் பரஸ்பர விரோதத்தினால்பரஸ்பரம்வியாபார பஹிஷ்காரம்கூடச் செய்து கொண்டிருக்கின்றார்களாம்.

* * *

சென்ற வாரம் ௧௫௧-குடும்பங்கள் இந்து மதத்தில் புனர்ப்பிரவேசம் செய்து பிராயச்சித்தம் செய்து கொண்டார்களென்று ஆக்ரா சுத்தி சபையார் அறிக்கைதெரிவிக்கின்றது.

* * *

திபேத்நாட்டு மனிதர் தேயிலைக் குடிக்காகத் தமது வீடு வாசலைவிற்பதுமன்றி மனைவி மக்களையும் விற்கிறார்களாம். என்னே! குடியின் மகத்வம் !!

* * *

வைத்திய சிகித்சைக்காக மாத்திரம் விஸ்கி என்னும் மதுபானத்தை உபயோகித்துக் கொள்ளலாமென்று அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தார் உத்தர விட்டிருக்கின்றார்களாம்.

* * *

மதுரை ஸ்ரீமாந் ஏ. வைத்திநாத அய்யர் ஜூன் ௧௫௨ யன்று மதுரையில் நடந்த ஒருபொதுக்கூட்டத்தில் தாம்செய்துவந்த நியாயவாதித் தொழிலை அன்று முதல் விட்டுவிட்டதாகக் கூறினார்.

* * *

சீனாவில் ஸ்தல அதிகாரிகளை நியமிக்கும் விஷயத்தில் மந்திரி சபைத் தலைவர் அனாவசியமாகத் தலையிட்ட காரணம்பற்றி மந்திரி சபையினர் தங்கள் தங்கள் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டனர்.

* * *

பிலடெல்பியா என்னும் நகரில் உள்ள ஸ்ரீமான். இ. ஜே. கிறீஸ்தி என்பவர், ஒரு மணிக்கு ௨00-மைல்கட்குமேல ௪00-வரையில் வேகமாகச்செல்லக்கூடிய துவிசக்கரவண்டியொன்றைச் செய்திருக்கிறாராம்.

* * *

ஆங்கில ஏகாதிபத்யமே மனித வாழ்க்கையின் நலத்திற்காக ஏற்பட்டதென்று சமீபத்திற் கூடிய பாதிரிமார் சங்கத்தின் ஆதரவில் பேசியபோது ஸ்ரீமான் லாயிட்ஜார்ஜ் சொன்னாராம்.

* * *

சகஸ்திரபுத்தி,கவிசாகரா, ஞான விசாரத், சிரோமணி, ஞானானந்த, சண்டமாருதம், ரத்னாகரம், சூடாமணி, மகாவித்வான், சுவாமி பிரமானந்த சரஸ்வதி என்பன ஒரு பண்டிதருக்குரிய பட்டங்களாம என லோகோபகாரி கூறுகிறது.

* * *

தாஸர் தமிழ்நாட்டில் பட்டபாட்டை யறியாது, "லோகோபகாரி" "தேசபந்து தாஸர் பென்னாட்டில் சென்ற இடமெல்லாம் ஜனங்கள் சிறப்பாக வரவேற்று வருகிறார்கள்" எனக்கூறுகிறது. நகரங்களிலுறைவோரில் சிலருக்கு நாட்டு நடப்புத் தெரியாது போலும்!

* * *

சட்டசபைப் பிரவேசவிஷயமாய் அகில இந்திய தேசீயக்கூட்டத்தார் செய்துள்ள தீர்மானத்தை ஸ்ரீமான் தாஸர் பிறந்த வங்காள மாகாணக் கூட்டமும் ஒப்புக்கொள்ளவில்லை. மகாராஷ்டிரமும் மறுத்துவிட்டது. குஜராத்தும் அப்படியே. தமிழ் நாடும்தள்ளிவிட்டது.

* * *

ஸ்ரீமான் தாஸர் இந்தவூரில் பேசிய மாதிரியே அவர்சென்றவிடங்களிலெல்லாம் "தீர்மான வேலை என்ன செய்துவிட்டீர்கள்; எத்தனை அங்கத்தினர்கள் சேர்த்துவிட்டீர்கள்" போன்ற வைகளையே திருப்பித் திருப்பிகேட்டு விட்டுச் சென்றாராம். கோபத்திலும் குறைவில்லையாம். இந்நாள் தமிழ் நாடெங்கும் தாஸர் இகழப்படுகிறார். வாழ்வொருகாலம்; தாழ்வொருகாலம்.

* * *

மதுரை பத்மாசனியம்மாள்சட்ட மறுப்புச் செய்யவேண்டுமென்பதில் மிக முனைந்து நிற்கிறார். தமிழ்நாட்டில், எல்லா இந்திய தேசீய சபை முதலிய இடங்களில் அங்கத்தினராக விருந்துக்கொண்டுத் தங்கள் பெயர் அடிபடச் சில பெண்கள் ஆடம்பரங்கள் செய்து வருகின்றாரேனினும், பத்மாசனியையை ஊக்கமுள்ளார் இந்நாள் வேறு எவரும் இல்லையென்று கூறலாம்.

* * *

பாரிஸில், "பாரொல்பவர்" என்னும்வாரமிருமுறைப்பத்திரிகை ஏற்பட்டிருக்கிறதாம். ஆனால் இது எழுத்துமூலம் பத்திரிகையில்லையாம். வாய்ப்பேச்சுப்பத்திரிகையாம். அதாவது இதன் பத்திராதிபர் சந்தாதாரர்கட்கு வர்த்தமானங்களைப் படித்துச் சொல்வாராம். அவசியமான விஷயங்களில் வாதம் செய்து தமது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதுதான் அப்பத்திரிகையின் தலையங்கமாகுமாம்.

* * *

சமீபத்தில் நடந்த மாப்பிளைக் கலவரத்தில், நீ கலந்திருந்தவனென்று உன்னைக் கைதியாகப் பிடித்துவிடுவேன்; ௧000 ரூ. கொடுத்தால் உன்னைத் தப்பித்து விடுகிறேனென்று பயமுறுத்தி ஆதன்என்பவனிடம் இரண்டு தடவைகளில் ரூ. ௫00 லஞ்சம் வாங்கிய போலீஸ் இன்ஸ்பெக்டர் ராவ் பகதூர் நீலகண்டன் நாயரென்பவர் மேல், கள்ளிக்கோட்டை ஜில்லாமாஜிஸ்தரேட் அவர்கள் இ. பி. கோ. ௩௮௪-வது பிரிவுப்படி இரண்டு குற்றம் சாட்டியிருக்கிறார்.

* * *

இமய மலையில், கோவா என்னும் பெயருடைய ௨௪0— வயதடைந்த ஒரு பெரியவர் வசித்து வருகின்றாரென்றும், அவர் திடீரென்று தோன்றுவதும் திடீரென்று மறைவதுமான சக்தியுடையாரென்றும், அவர் தமது அவயவங்களை நீட்டவும் குறுக்கவும் செய்து கொள்ளும் சக்தி யுடையவராயிருக்கின்றாரென்றும், தனது வயதைத் தனது இஷ்டம்போல் நீட்டிக்கொள்ளும் சக்தி தனக்கு உண்டென்று அவர் சொன்னாரென்றும அவரை நேரேகண்டு சம்பாஷித்த- தற்போது இமய மலையின் மேலே ஸஞ்சரித்துக் கொண்டு திபேத்துப் பிரயாணத்தைச் செய்து கொண்டிருக்கும் மேஜர்க்ராஸ் என்பவர் ஒரு உபந்யாஸத்தில் சொன்னாராம்.

பொதுச்செய்தி.

கானமாநகர்:—இவ்வூர் பிர்மவித்யாம்பா சமேத பூமீசுவர சுவாமியின் பிர்மோத்ஸவம் இம்மாதம் ௫௨ ஆரம்பமாகிறதென்றும் ௧௬௨ யோடு முடிவடைகிறதென்றும் விழாப்பத்திரம் கூறுகிறது.

* * *

கோ. அழகாபுரி:—இவ்வூரில் இம்மாதம் இரண்டாந் தேதி ஒரு பெருத்த அநியாயம் நடந்தது. ஆடுகள் காட்டை அளிப்பதால் அவைகளை வெட்டி விடத் தீர்மானித்து நாட்டுக் கூட்டம் கூடி ஆட்களை அனுப்பி வீடுகளில் வளர்த்த ஆடுகளை யெல்லாம் (பாலாடு உள்பட) வெட்டி வீழ்த்தி விட்டனர். ஆட்டின் சொந்தக்காரரும் பிறரும் எவ்வளவோ தடுத்தும் கேட்காது குழந்தைக்குப் பால் கொடுக்க வைத்திருந்த ஆட்டைக் கூட வெட்டிவிட்டனர். இது எவ்வளவு பெரிய அநீதி. இதற்குஒன்றும் கேள்வியில்லைப்போலும் என ஒருவர் எழுதுகிறார்.

* * *

உறுதிக் கோட்டை வட்டகை நகரத்தார்:—வைகாசிமீ ௯௨ சீனமங்கலத்தில் உறுதிக்கோட்டை வட்டகை நகரத்தார் கூட்டம் கூடி, வைகாசிமீ ௨௨ திருமுகம் வாங்கி ஆவணிமீ ௧௪௨ உபதேசங் கேட்பது என்று முடிவு செய்ததை சில சௌகரியங்களை யெண்ணி தைமீ ௨௬ உபதேசம் கேட்பது என முடிவு செய்யப்பட்டது. வைகாசிமீ ௨௨ திருமுகம் வாங்கியாய் விட்டது. இதற்கு முயற்சி செய்தவர்கட்கு வந்தனமளிக்கின்றேன். என சீனமங்கலம் வெ. கண. மு. இராமனுதன் எழுதுகிறார்.

* * *

புதுவயல்:—இவ்வூரில்,நாளதுமீ ௭௨ நடந்த உய்யவந்தம்மன் கோவில் குட்டி வெட்டுப் பொங்கலை முன்னிட்டு இவ்வூர் சரஸ்வதி சங்கத்தார் ஒரு வாரம் தினந்தோறும் உபந்யாசம் செய்தார்கள். ௪௨ மாலையில் காரைச் சிவனடியார் திருக்கூட்டத்துத் தலைவர் ஸ்ரீமாந், சொ. முருகப்ப செட்டியாரவர்கள் ஒரு விரிவுரை நிகழ்த்தினார்கள் என ஒருவர் எழுதுகிறார்.

* * *

பள்ளத்தூர்:—இவ்வூர் விநாயகர் சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவுவிழா நாளதுமீ ௧௨ கண்டனூர் ஸ்ரீமாந், தெ. அரு. சித. இராமனாதன் செட்டியார் அக்கிராசனத்தின் கீழ் பல அரிய உபந்யாசங்கள் நடைபெறும் என்று காரியதரிசி எழுதுகிறார்.

* * *

வேந்தன்பட்டி:—இவ்வூர்த் திருவள்ளுவர் வாசக சாலையில் நாளிதுமீ ௫௨ மாணிக்கவாசகர் குருபூஜை தினத்தன்று காலை ௧0 மணி முதல் அன்னாரின் திவ்ய சரிதம் வாசிக்கப்பெற்று பல விநியோகாதிகள் வழங்க ௧-௧0 மணிக்கு இனிது நிறைவுற்றது என காரியதரிசி பழ. ப. பழநியப்ப செட்டியார் எழுதுகிறார்.

* * *

ஆவினிப்பட்டி:—இவ்வூர் ஸ்ரீ மீனாம்பிகா வாசகசாலையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா நிகழும் வைகாசிமீ ௨௭௨ பிற்பகல் ௪ மணிக்கு திருவாளர் மு. மு. முத்தய்யா செட்டியாரவர்கள் தலைமையிற் கூடியது. அவ்வமயம் பல மெய்யன்பர்கள் உபந்யசித்தார்கள். பின்னர் தலைவரவர்கள் முடிவுரை கூற சந்தன தாம்பூல விநியோகாதிகள் வழங்கப் பெற்று மாலை ௬ மணிக்கு சபை இனிது நிறைவேறியது என்று காரியதரிசி கரு. பெரி. விஸ்வநாதன் செட்டியார் எழுதுகிறார்.

* * *

பள்ளத்தூர்:—இவ்வூர் நகரச் சிவன் கோவிலில் விநாயகசங்கத்தாரால் மாணிக்கவாசகர் திருநாளைமுன்னிட்டு நாளிதுமீ ௩௨ மாலை ௬-மணிமுதல் ௮-மணிவரை காரைச்சிவனடியார் திருக்கூட்டத்து அங்கத்தினர் சேவு. மெ. மெய்யப்பசெட்டியாரவர்கள் மாணிக்கவாசகர் சரிதம் திருவாசகப்பெருமை முதலிய விஷயங்களை மிக அழகாக அன்புததும்பப்பேசினார்கள். ௫௨ சிவன்கோவிலில் சமயாச்சாரியார் நால்வருக்கும் அபிஷேக அர்ச்சனைகள் சிறப்பாக நடந்தன. இரவு மாணிக்கவாசகர் திருவீதி வலம் வரும்பொழுது பஜனை நடந்தது. வாலிபர்கள் பெண்மக்கள் வருகை குறிப்பிடத்தக்கது என்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

* * *

கூழிபிறையில் மாணிக்கவாசகர் திருநாள்:—இவ்வூர் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் மாணிக்கவாசக சுவாமிகளின் திருநாளை முன்னிட்டு தனவைசிய வாலிபர்சங்க ஸ்தாபனத்தில் ௫௨ செவ்வாய்க்கிழமை யன்று காலை ௭-மணிக்கு சுவாமியவர்களின் படத்திற்கு பூசை முதலியன செய்யப்பெற்று ௮-மணி முதல் பகல் ௧-மணிவரை சுவாமியவர்களின் சரித்திரம் வாசிக்கப்பெற்று பின்னர் மாலை ௫-மணி முதல் பல அன்பர்களால் திருவாசகப் பஜனை இன்னிசைக் கருவிகளுடன் நடைபெற்றதும் பின் இரவு ௧0-மணிக்கு சுவாமியவர்களின் திருவுருவப்படத்தை ரிஷப வாகனத் தெழுந்தருளச்செய்து திருவாசக நாம பஜனையுடனும் ஊர்வலம் செய்துவைக்கப்பெற்றது எனக் கூழிபிறைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் அறிவிக்கிறார்.

* * *

ஈப்போ:—வைகாசி விசாக விழா:—இவ்வூர் ஸ்ரீ குகப்பெருமானின் வைகாசி விசாகப்பூசை நாளிது மாதம் ௧௬, ௧௭௨ களில் நகரத்தார்களால் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றது. அவ்வமயம் ஏழை ஜனங்களுக்கு இரண்டு தினமும் அன்ன தான மளிக்கப்பட்டது. பெருமான் ௧௭ தேதி இரவு விமானத்தில் ஊர்வலம் ஊர்ந்து பக்தகோடிகளைப் பரவசமாக்கினர்.

* * *

தேவாரக் கோஷ்டி:—இவ்வூர் தனவைசியர் சங்கத்தாரின் முயற்சியால் சம்சிறார்கள் தேவாரம் பண்ணுடன் ஓதுவிக்கப்பட்டு விசாக விழாக்காலத்தில் குகப்பெருமான் சந்நிதியில் பஜனை செய்தார்கள். அவர்களின் பாடல் வந்தவர்களின் மனதைக் கவரச் செய்தது.

தனவைசிய சங்கம்:—இச்சங்கத்தின் இரண்டாவதாண்டு நிறைவு விழா ௧௬, ௧௭௨ களில் விசாகவிழா காலத்தில் காலை ௯ மணி முதல் ௧௨-மணி வரை கோலாலம்பூர் ஸ்ரீமான் நா. சுப. அரு. ராம. சுப்பிரமணியன் செட்டியாரவர்களின் அக்கிராசனத்தில் செவ்வனே நடைபெற்றது. முதல் நாள் குகப்பெருமானின் சன்னிதானத்தில் அக்கிராசனர் வரவேற்கப்பட்டு காரியதரிசியால் சென்ற ஆண்டின் அறிக்கைப் பத்திரம் படிக்கப்பட்டது. பிறகு திருவாளர்களான ராம. அண்ணாமலை செட்டியார் "ஐக்கியம்" என்பதையும், பழ. சொர்ணம் "சூதாடல்" என்பதையும், அ. நா. அ. அண்ணாமலைசெட்டியார் "பெண்கல்வி" என்பதையும், அழ. ராம. திருநாவுக்கரசு செட்டியார் "பரோபகாரம்" என்பதையும்பற்றி பிரசங்கித்தார்கள். இரண்டாவது நாள் சங்கக் கட்டிடத்தில் ஷை சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் அக்கிராசனத்தில் திருவாளர்களான மு. பழ. பழனியப்ப செட்டியார் "நிலைமை" என்பதையும், சா. நா. சா. அருணாசலஞ் செட்டியார் "அறிவு" என்பதையும், மெ. நா. கருப்பன் செட்டியார் "முயற்சி" என்பதையும், அண. நாராயணன் "ஒற்றுமை" என்பதையும், வெ. மெ. கருப்பன் செட்டியார் "கல்வி" என்பதையும், அரு. சோம. சு. சோமசுந்தரஞ்செட்டியார் "கைத்தொழில்" என்பதையும் பற்றிப் பிரசங்கித்தார்கள். அக்கிராசனரவர்கள் மிக அழகாக முடிவுரை கூறினார்கள். திருவாளர் ஆத. லெ. ஆத. இராமநாதன் செட்டியார் உபசாரம் சொல்லி சந்தன தாம்பூலம் கற்கண்டு வழங்க சபை இனிது நிறைவெய்தியது என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

* * *

பர்மாவில்ஒருமணம்:—பலவான்குடியினின்றும் வந்து தற்காலம் தத்தவத்தைச் சேர்ந்த யுவாத்தி என்ற ஊரில் வசித்துவரும் இரணியூர்க் கோவிலைச் சார்ந்த சிதம்பரஞ்செட்டியார் என்பவருக்கும் ஓர் பர்மா மாதுக்கும் பிறந்த சோமசுந்தரத்திற்கு, பள்ளத்தூரிலிருந்து ரெங்கூனில் வந்து வியாபாரம் செய்து கமாயுட்டில் வசித்துவரும் வைரவன் கோவிலைச்சார்ந்த வைரவன் செட்டியாருக்கும் நாயக்கம்மிக்கும் பிறந்த சாரதாம்பாளை, வைகாசிமீ ௨௧௨-யன்று கம்பை வேங்கடேசப்பெருமான் முன்னர் மணஞ் செய்துவைக்கப் பெற்றது. மணத்திற்குப் பெரியோர்களும் நகர வைசியர்களும் வந்திருந்தனர். எல்லோரும் திருவமுதுண்டு இல்லம் ஏகினர். இக்கல்யாணத்திற்குச் சொற்பப் பொருளே செலவாயிருக்கின்றது என பர்மாவாசி ஒருவர் எழுதுகிறார்.

காலனென்செயும்! வினைதானென்
செயும்! எனை நாடி வந்த
கோளென்செயும்! கொடுங்கூற்
றென்செயும்! குமரேச ரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையும் ஷண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்கு முன்னே
வந்து தோன்றிடினே.

—கந்தரலங்காரம்.

தனவைசிய ஊழியன்,
காரைக்குடி ஆனி ௴ ௮௳

எப்பொழுதும் யோஜனையா?

"எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவ மென்பதிழுக்கு" என்ற தேவர் வாக்கிற்கிணங்க எந்த ஒரு காரியத்தையும் ஆரம்பிக்கும் முன்னர் தீர்க்கமாக யோஜித்துச் செய்யவேண்டுவது மிகவும் அவசியமே. செய்தபிறகு யோஜித்து மனக்குழப்பமுற்று அல்லற் படுதல் ஆகாது. முன்னரே ஒரு முடிவு கட்டிக்கொண்டுதான் பிரவேசித்தல் வேண்டும்.

ஆனால், இதனை யெண்ணிக்கொண்டு ஒரு நாளும் முடிவிற்கேவராமல் எப்பொழுதும் யோஜனையிலேயே யிருத்தல் ஆகுமோ? யோஜனையின் முடிவுதான் எப்பொழுது? எண்ணித் துணிக என்பதற்கு ஒவ்வொன்றையும் நீண்டகாலம் யோஜித்துக் கொண்டிரு என்றுபொருளாகுமோ? நாம் செய்யப்போகும் காரியத்தி லுள்ள நன்மை தீமைகளைப்பகுத்து ஆய்ந்துசெய்யத்தக்கதைத் தாமதமின்றிச்செய் துவிடல்வேண்டுமென்றோ? "செய்தக்கவல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமை யானுங் கெடும்." செய்யத்தக்ககாரியத்தைச் செய்யாதொழிதல் சிரமத்திற்குள்ளாக்குமன்றோ? அன்றி, ஆயுள் வரை யோஜித்துக்கொண்டேயிருந்தால் காரியம் செய்வதுதான் எப்பொழுது?

ஒன்றைச்செய்யும்பொழுது ஆராய்ச்சியின்றி, படபடவென்று ஆரம்பித்துவிடுதல் ஆகாதே யொழிய காலந்தாழ்த்துச் செய்யவேண்டுமென்பதுண்டோ? எதனையும் பின்னே செய்யப்போகிறோம் என்பது என்ன நிச்சயம்? ஆயுளுக்கு ஒரு அளவுதானுண்டோ? "நன்றாய தொழிலினைப் பின்னைச்செய்வோமெனக் கருதாது அன்றே செய்திடல்வேண்டும்." "நன்றே செய்ய வேண்டும்; நன்றும் இன்றே செய்ய வேண்டும்; இன்றும் இன்னே செய்ய வேண்டும்." உரிய காலத்தை வீணே கடத்தல் ஆகுமோ? காலம் போற்றுதல் மக்கட்குக் கடனன்றோ? 'நாளென வொன்றுபோற் காட்டி உயிரீரும் வாள்' என்றோ காலம்.

இதனை உணராது செயத் தக்கதைக் காலந் தாழ்த்தும் செய்யாது கிடத்தல் மக்கட்கழகோ? நமது ஊழியர் சங்கம் மணஞ்செயப் புகுந்து ௧௦ மாதங்களாகின்றன. இதுவரை நான்கு மணங்களே நடந்திருக்கின்றன. ௧௦ மாதங்கட்கு நான்கு மணங்கள் அமையுமோ? மணஞ்செய வேண்டியவர் ஆயிரக் கணக்காக விருப்பது பொய்யோ? இத்தனை பேர் மணஞ்செய வேண்டியவரிருந்தும்,மணத்திற்குவழியின்றித் தவிக்கும் நிலையை அறிந்து வழி காண்பித்துக் கூட்டிச் சென்று ஒல்லும்வகை வேண்டுவ புரிய, கடமையை யுணர்ந்தோர் முன் வந்தழைக்க, அவர்கள் ஒலிக்குச் செவிசாய்க்காது நித்திரை பிடித்தால் யாரே என் செய்யலாம். ஊழியர் சங்கம் பிரயாசை யெடுத்துப் பெண் தேடித்தருமேயொழிய, மணஞ்செய வேண்டியவர் உறக்கம் பிடித்தற்கு ஊழியர் சங்கம் என் செய்யும்? அநேகர் "செய்யலாமா; கூடாதா? கூடாதா; செய்யலாமா?" எனத் திருப்பித் திருப்பி யோஜித்துக் கொண்டிருக்கின்றனர்.

மணமாகவேண்டிய வாலிபர்காள்! நன்றாக ஒரு முறைக்குப் பன்முறை யோஜியுங்கள்! யோஜிக்க வேண்டுவதே. யோஜிக்கவேண்டாமென்று யாரும் கூறவில்லை. யோஜனையிலேயே காலத்தைக் கழித்தால் யோஜனையின் முடிவுதான் எப்பொழுது என்றுகேட்கிறோம். ஆயிரக்கணக்கானவர் மணமாக வேண்டியவரிருந்தும் இச்சமூகத்தில் மணமாக வழியில்லாதிருக்கும் நிலையில், மணம் வேண்டி வருந்தும் சமயம், வரும் மணத்தை மதியாதிருப்பது வருந்தத்தக்கதே.

யோஜிப்பது எதைப்பற்றி என்பதன்றோ விளங்கவில்லை. வீணே, யோஜனை; யோஜனை என்றால் யோஜனைக்கும் பொருள் வேண்டுமன்றோ? இந்த சமூகத்தில் மணம் வருமென்று யோஜிக்கின்றீர்களா? வருமானால் செய்து கொள்வதை மறுப்பாரில்லை. இத்தனை காலமும் வராமல் இனிமேலாவரப்போகிறது? வருமென்பதற்கு அறிகுறியேதேனு முண்டா? இத்தனை காலமுமில்லாமல் இன்று வருமென்று எண்ணுவதற்கு என்ன புதிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது?

வேறு வகுப்பில் மணஞ் செய்தல் பெருகினால் பின்னர் நமது சமூகத்தில் சரளமாக மணம் வர இடமுண்டு. நமது சமூகத்தில் பெண்கள் மலிய இந்நான்கு மணங்கள்போதுமோ? வரும் வரும் என்று காத்துக்கொண்டிருத்தல் பகற்கனவே. "வேறு வகுப்பில் பலர் மணந்து கொள்ளட்டும்; பிறகு மலிந்தவுடன் நாம் சொந்த ஜாதியிலேயே மணப்போம்." என எண்ணுவீர்களோ? எல்லோரும் இவ்வாறெண்ணின் யார் இதற்கு முன் வருவது? இதுவும் நடக்கப் போகிறதில்லை; அதுவும் நடக்கப் போவதில்லை. உடனே முன்வந்து நடத்தி நமது சமூகப் பெண்களை மலிய வைத்தலன்றோ பெருமை. உங்கள் எண்ணம் போல் அது நடக்க வேண்டுமானால் இதற்கு இம்மியுந் தாழாது விரைந்து வருதல் வேண்டும்.

வேறு சமூகத்தில் மணப்பதற்கும் நமது சமூகத்தில் மணப்பதற்கும் வேற்றுமையுண்டென என் கருதுகின்றீர்கள்? எல்லாவற்றிற்கும் மனமே காரணமாகவிருக்கின்றது. வீணே யோஜித்துக் காலத்தைக் கடத்தாதீர்கள், பருவகாலத்தை வீணே பாழாக்குகின்றீர்கள்!

கஷ்டப்பட்டுத் தவிக்கின்றீர்கள்! சுருப்பு தின்னக் கூலி கேட்பதுண்டா? கடத்தின காலம் போதும்! கண்ணீர் விட்டகாலம் போதும்! ஏங்கியகாலம் போதும்! எழுங்கள்! எழுங்கள்!! எதற்கும் யோஜிக்க வேண்டாம்! இனியேனும் இன்பந்துய்க்க எழுங்கள்!!

சமூகத்திலுள்ள பெண்ணப்பஞ்சமாப் பெருங்குறையை நீக்கவேண்டுமானால்—சமூகத்தை உருவாக்க வேண்டுமானால்—சமூகப் பெண்கள் மலிய வேண்டுமானால்—அனைவரும் திருமணம் பெற்றுப் பெருவாழ்வு வாழவேண்டுமானால்—யோஜனையை இம்மட்டோடு நிறுத்தி அச்சத்தை யகற்றி இன்றே மணத்தை நாடி வருக!

தமிழ்ப் பண்டிதர்கள்.

தமிழ்ப்பண்டிதர்கள் தமிழ்வளர்ச்சிக்குரிய செயலை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லும் நிலையொன்று வந்ததே வருந்தத் தக்கதாகும். எந்தமொழியும் போற்றுவாரிருந்தால்தான் வளம் பெற்றிருக்கும். தமிழ் மொழியின் நிலையைப் பற்றி முன்னர் பலமுறை யெழுதியுள்ளோம். எனினும் அது சீர்திருந்தும் வரை அதனைத் திரும்பத் திரும்ப எழுதக் கடமைப் பட்டுள்ளோம்.

தமிழ்மொழியைப் பிறர் போற்றும் நிலைக்குக் கொண்டுவராவிடினும் தமிழரேனும் போற்றுதல் வேண்டும். அதிலும் அம்மொழி பயின்று பாண்டித்யம் பெற்ற அன்பர்கள் அதிற் பெரிதும் நாட்டம் செலுத்துதல் வேண்டும். இந்நாள் தமிழ்மக்கள் தமிழ் மொழியின் மாண்பை மறந்து, முதலில் தாய்மொழி பயின்றுதான் பிறமொழி பயிலவேண்டுமென்ற எண்ணம் இம்மியுமில்லாது பிற மொழியே பயில முற்படுகின்றனர். அவர்கட்குத் தமிழ்மொழியின் மாண்பை அறிவுறுத்த வேண்டுவது யாருடைய கடன்? தமிழ்ப்பண்டிதர்களுடையதன்றோ?

தமிழ்ப் பண்டிதர் அதன் பொருட்டு என் செய்கின்றனர்? இந்நாளில் தமிழ்ப் பண்டிதர்களே அருகி வருகின்றனர். தமிழ் படிப்போர் மிகச் சிலரே. தமிழ் மக்கள் ஐந்து வயதிலேயே ஆங்கிலப் பள்ளிகட்கு அனுப்பப்படுகின்றனர். உலகஅறிவு வரும் வரை அப்படிப்பு சரியாக விருக்கிறது. பிறகு தமிழ் படிப்பதெங்ஙனம்?

தமிழ் மக்கள் தமிழ் படித்தோரைக் கௌரவப்படுத்தி அவர்கட்கு ஒரு மதிப்பையும் வுதிபத்தையும் தந்து வருவார்களானால், தமிழ்ப் படிக்க அநேகர் முற்படுவர். தமிழ் மொழி வளரும்.

மொழியை வளர்க்காது பிறசெய்வதில் பயனில்லை. தமிழ் மொழியில் இப்பொழுது புதிதாக வந்த அநேகம் விஷயங்கட்குச் சொல் உண்டாக்குதல் வேண்டும். தமிழ்ப் பண்டிதர்கள் இந்நாள் பழைய புராணங்களையே வைத்துப் படித்துக் கொண்டு திண்ணைகளில் உட்கார்ந்திராது உலகத்தைச் சிறிது கண் திறந்து பார்த்தல் வேண்டும். உலகத்தோடு தாமும் ஒத்து முன்னேறிச் செல்லல் வேண்டும். சொற்களைப் புதிது புதிதாகப் பொருட் பொருத்தம் பார்த்து ஆக்குதல் வேண்டும்.

நேற்றுச் சிலர் சேர்ந்து ஆக்கப் பட்ட மொழி வையகத்திலுள்ள எல்லா மொழிக்கும் தலைமை பெற்றுவிடும் நிலையை அடைந்து வருகிறது. நமது தொன்மைத் தமிழ்மொழி அதற்கு உரியாராலும் புறக்கணிக்கப்படுகிறது. தமிழ்ப் பண்டிதர்கள் முன் வந்து தமிழைத் தமிழர்கள் ஆதரிக்கும்படிசெய்தால் தமிழ் ஓரளவு வளரும்.

இடி முழக்கம்.

சம்பாவனை.

இவ்வூர் திருவாளர் நா. வ. நாகப்ப செட்டியார் அவர்கள் தமது புதல்வனுக்கு நடாத்திய காப்புக்கட்டும் புதுமையில் நமது பத்திரிகைக்கு ரூ. ௫. சம்பாவனை செய்தனுப்பியுள்ளார்கள் அவர்கட்கு எமது நன்றி உரியதாக!

கேள்வி முறை யில்லையா?

சமீபத்தில் கோட்டையூரை அடுத்த அளகாபுரியில் ஒரு சம்பவம் நடந்ததாக ஒரு நிருபர் விடுத்த செய்தி பொதுச் செய்தியில் வந்துளது. அதனைப் படிக்கும் அன்பர்கள் கண்ணீர் விடாதிருக்க முடியாது. காடுகளை அழிக்கின்றனவென வீடுகளில் வளர்த்த ஆடுகளை யெல்லாம் வந்து சிலர் வெட்டி விட்டனராம். இது என்ன பாதகச் செயல்! ஒருவருக்குச் சொந்தமான பொருளில் மற்றவர் பிரவேசித்து அழித்தால் அதற்கொன்றும் கேள்வி முறையில்லையா? ஆடுகளின் சொந்தக்காரர் வெட்டி வீழ்த்தியவர் மீது வழக்குத் தொடுத்து என் தண்டிக்கக் கூடாது? ஆடுகள் செய்த பாபந்தானென்னவோ? எல்லாம்

தந்திச் செய்தி

பினாங்கு ஆனி ௴ [illegible]

சென்னை உண்டியல் விலை நூற்றெழுபத்து மூன்று

சயம் விலை தொண்ணூற்றொரு

ரப்பர் விலை அறுபத்து [illegible]

இரங்கூன் ஆனி [illegible]


மில் அரிசி பெரிது	[illegible]
ஷை சிறிது	[illegible]
நெல் விலை	[illegible]
தவரை	[illegible]
உழுந்து	[illegible]
கடலை	[illegible]
வெள்ளை மொச்சை புதிது	[illegible]
ஷை பழசு	[illegible]
செப்பு மொச்சை	௨௦௭—௮—௦
பாசிப்பயறு	[illegible]
கோதுமை	[illegible]
உண்டியல்	[illegible]
பவுன்	[illegible]
தங்கம்	[illegible]
வெள்ளி	[illegible]
தவணைவட்டி	௦—௧௨—௦

பணம் நிதானம்.

ஆடுகட்குத்தானா வரவேண்டும்? எளியாரை வலியார் கொன்றால் வலியாரைத் தெய்வந்தான் கொல்ல வேண்டும். கொலைப்பாபம் சும்மா விடுமா?

"ஈசா என்செய்வோம்."

இத்தலைப்பின் கீழ் நேட்டாலில் இந்தியர்கள் வெள்ளையர்களிடம் படும் பாட்டைப்பற்றி தர்பன் நகரில் வெளியாகும் "விவேகபாநு" என்ற வாரப்பத்திரிகை ஒரு தலையங்கம் வரைந்துளது. அதனைப் படிக்கும்பொழுது இந்தியர்கள் நிலையை எண்ணி ஏங்கவேண்டியதாகத் தானிருக்கிறது. அங்கு இந்தியர்களை வெள்ளையர்கள் படுத்தும் பாட்டிற்கு ஓர் அளவில்லை. இந்தியர்களிடம் அவர்கள் நடந்துகொள்ளும் முறையிலிருந்து இந்தியர்கள் தாழ்ந்தவர்களென்றும் தாங்கள் மிகஉயர்ந்தவர்களென்றும் அவர்கள் கருதுகின்றார்கள் என்று தெரிகின்றது. அரசாங்கமும் அவர்கட்கே துணைபுரிகின்றது. உயர்வு தாழ்வு, கடவுளின்நிலையல்லவா? அம்முறை பார்க்கின் யார் உயர்ந்தவர்? யார் தாழ்ந்தவர்? பேசிப் பயனென்ன? இனிமேல் இந்தியர்கள் எங்குதான் மதிக்கப்படுகின்றனர்? இந்தியர்கள் மதிக்கப்படும் நாள் எந்நாளோ! இந்தியர்கட்கு ஈசன்தான் துணை.



வீரகெம்பீரன் எழுதுவது:-

நான் வந்து ரொம்ப காலமாகிவிட்டது. அளவு கடந்து ஓய்வு எடுத்துக்கொண்டு விட்டேன். நான் எனது அன்பர்களாகிய உங்களோடு அளவளாவி எவ்வளவு காலமாகிவிட்டது என்பது எனக்கே ஞாபகமில்லாமல் போகும்படி அவ்வளவு காலம் வாளாவிருந்து விட்டேன். அது தவறுதான். சோம்பரை வெல்வதென்றால் அது சிரமமாகத்தானிருக்கிறது. பிறருக்குச் சொல்வதென்றால் சட்டென்றுசொல்லிவிடுவேன். அநுட்டிப்பதென்றால் அது சாதாரணமான காரியமா?

* * *

எனக்கு ஒரு நண்பருண்டு. அவர் நல்லவர்; பாபம்! அவர் எது செய்த போதினும் அவருக்கு அது குற்றமாகத் தெரியாது. பிறரைப்பற்றிப் பேசுவதில் பெரிய தீரர் அவர். எல்லோர் குற்றமும் பேசுவது அவருடைய வழக்கம். அவர் பிறருக்கு வசைமாலை சூட்டி அலங்கரிக்க ஆரம்பிப்பாரானல் மனிதர் கிட்டத்தில் நிற்க முடியாது. அவ்வளவு அழகாகத் தொடுப்பார். கேட்டுக் களிப்பதற்கென்றே சிலர் உண்டு. தன்னைப்பற்றிய கவலையே அவருக்கிருப்பதில்லை. அது இருந்தால்தான் ஒழுங்காக வந்து விடுவாரே! சமயத்தில் இன்னது பேசுவது இன்னது பேசப்படாதென்பதே அவருக்குத் தெரியாது. வாயில் வந்ததைப் பேசிவிடுவார். பொருளுண்டா என்பதை எண்ணவே மாட்டார். ஒருவரை, "முழுமுட்டாள், அயோக்கியன், மடையன், அவன், இவன்" என்றும் இன்னும் எழுதத் தகாத சில வார்த்தைகளும் சொல்லிவைது விடுவார். என்ன "அவர் நல்லவரில்லை யென்று இவர் சொல்லி விட்டார்; இப்படியா வைவது" என்று பிறரைச் சொல்லுவார். எனது நண்பர் வைத வசவைக் காட்டிலும் மற்றொருவர் சொன்ன சாதாரண வார்த்தை பெரிய வசவு என்பது நண்பருடைய அபிப்பிராயம். எனது நண்பர் ஒருவர் மாத்திரமல்ல; இப்படிப் பலர் உலகிலிருக்கலாம். இப்படிச் செயலுடையார் ஒவ்வொருவரும் தங்கள் தங்களை என எண்ணிக்கொண்டு வருத்தப்படத்தான் செய்வர். இன்னொருவர் மனம் வருந்துவதில் எனக்கும் பிரியமில்லைத்தான். என் செய்வது? சொல்லித்தான் ஆகவேண்டியதிருக்கிறது.

* * *

உலகம் விசித்திரமாகத்தானிருக்கிறது. தான் செய்யும் குற்றத்தை மற்றொருவர் செய்தால் கோபம் வந்துவிடுகிறது. அதே விஷயத்தை, தான் செய்யும்பொழுது அது குற்றமாகத் தோன்றவில்லை. உதாரணமாக:—ஒருவருடைய மனைவி வியபிசாரஞ் செய்தால் அவருக்குப் பெருங் கோபம் வந்து விடுகிறது. தான் ஊரில் ஒன்றையும் பாக்கி விடாது செய்யுங் கேட்டைப்பற்றிய கவலை அவருக்கிருப்பதே யில்லை. "ஏதிலார் குற்றம்போல் தன் குற்றங் காண்கிற் பின் தீதுண்டோ மன்னு முயிர்க்கு.

* * *

ஓரிடத்திற் சிலர் கூடினர். அது ஒரு விசேஷக்காரர்வீடு. நமது விசேஷக்காரர் வீடுகளில் என்ன பேசுவார்கள் என்பதுதான் உங்கட்குத் தெரியுமே. ஒருவர் சொன்னார்:—"என்னங்கிறேன் ஊராராகக் கூடிக்கொண்டு தீர்மானம் தீர்மானம் என்று ஏதேதோ செய்தார்களே! நிலைத்ததா? பார்த்தீர்களா! ஒன்றுங் குறையவில்லை; எல்லாம் வரவர விர்த்திதான்; கறிதான் என்னமோ நடந்து வருகிறது. அதுவும் சவுகரியத்திற்காகத்தான் செய்கிறார்களே தவிர இவர்கள் சொன்னதற்காகவா? செய்கிறதைச் செய்தால் தானே இங்கிறேன் நிலைக்கும்." மற்றொருவர், "அது நிசந்தானே. இதெல்லாம் கட்டுப்படுத்த முடியுமா?" என்றார். இன்னொருவர் அதை ஆமோதித்தார். பின்னொருவர் தமக்குத் தெரிந்ததைவிரித்தார். நல்ல மனிதர்களும் சிலர் இருப்பார்களல்லவா? அவர்கள் தங்கட்குத் தெரிந்த நியாயத்தை எடுத்துச் சொல்லினர். கூட்டம் ஏதோ ஒருவாறாக முடிவுற்றது. காப்பியைக் குடித்துவிட்டுச் சீட்டுப் போட ஆரம்பித்தார்கள். பார்த்தீர்களா, புத்திசாலித்தனத்தை!

* * *

ஜாதிக்குழைப்பவர்களைக் கண்டால் நல்ல மனிதர்கள் "என்ன, எவ்வளவோ பாடுபட்டீர்கள். ஒன்றும் பயனில்லாது போய்விட்டதே. பாபிகள் கெடுத்து விட்டார்களே" என்று வருத்தப்படுகின்றனர். வேறு மனிதர்கள் "என்ன தம்பி! எல்லாம் தீர்ந்து விட்டது; இப்பொழுது ஜாதியைக் கெடுக்க ஆரம்பித்து விட்டீர்கள்! எப்படியிருந்தாலும் நச்சாந்துப்பட்டியில் நீங்கள் செய்தது அக்ரமம். என்னமா இருந்தாலும் நீங்கள் அரு. லெ. வை எழுதியிருக்கப்படாது. அவர்கள் காரியக்காரர்களல்லவா?" என்கின்றார். வருத்தப்படுபவரிடத்து ஏதோ வருத்தப்பட வேண்டியதாகத்தானிருக்கிறது. பின்னையோரை நினைத்து அழுவதா? சிரிப்பதா? என்பதுதான் கேள்வி.

உள்ளூர்ச் செய்தி.

ரங்கூன் உண்டியல்வட்டம் க-கஉ-0
சென்னை உண்டியல் வட்டம் 0-எ-0

நாகநாதபுரம் சிவன்கோவில் உத்ஸவம்:—இவ்வுத்ஸவம் இன்று தினம் ஆரம்பமாகிறது. களடியோடு முடிவடைகிறது. வழக்கம்போல் யாவும் நடைபெறுமெனத் தெரிகிறது.

மாணிக்கவாசகர் திருநாள்:—காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் சிவன்கோவிலில் சுவ ஸ்ரீமாந், முத்த. வெ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களும், நிவ ஸ்ரீமாந்களான, மு. அருணாசலம் செட்டியார் சொ. முருகப்ப செட்டியார் முதலிய மூவரும் சொற்பெருக்கிட்டார்கள். என்று உதவிக் காரியதரிசி எழுதுகிறார்.

குடி தண்ணீர்:—குடிதண்ணீர்க் கஷ்டம் இவ்வூரில் இப்பொழுது மிகுந்துவிட்டது. ஊருணிகளில் ஒரு ஊருணி கூடச் சாப்பிட யோக்யதையுடைய நீர் உடையதல்ல. ஊரில் கழிக்கப்படும் அசுத்தங்களெல்லாம் ஊருணிக் கால்களில் தான் வருகின்றன. இது விஷயத்தில் சிறிதும் சிரத்தையெடுத்துக் கொள்ளவில்லை. ஜனங்கள் உயிர் வாழ்வதற்கு மிகவும் பிரதானம் நீரேயாகும். நமது ஜனங்கள் இதிற் காட்டும் அசிரத்தையை வேறு எதிலும் காட்டுவதில்லை.

சம்பாவனை.

ஹிந்து மதாபிமான சங்கம்

ஜெயங்கொண்டபுரம் ஸ்ரீமாந் மெ. ராம. மெய்யப்ப செட்டியாரவர்கள், தமது புதல்வனுக்கு நடைபெற்ற காப்புக்கட்டுப் புதுமையில் ரூபா ஐந்தும் இவ்வூர் ஸ்ரீமாந், நா. வ. நாசப்பசெட்டியாரவர்கள், தமது புதல்வனுக்கு நடைபெற்ற காப்புக் கட்டுப் புதுமையில் ரூபா ஐந்தும் நமது சங்கத்திற்குச் சம்பாவனை செய்தனுப்பியுள்ளார்கள். அதனை வந்தனத்துடன் பெற்றுக்கொண்டு நமது நன்றியைச் செலுத்துகிறோம்.

அழ. அருணாசலம், காரியதரிசி.

காரைச் சிவனடியார் திருக்கூட்டம்.

ஜெயங்கொண்டபுரம் ஸ்ரீமாந். மெ. ராம. மெய்ப்பப செட்டியாரவர்கள், தமது புதல்வனுக்கு நடைபெற்ற காப்புக்கட்டுப் புதுமையில் ரூ. ரு-ம் இவ்வூர் ஸ்ரீமாந், நா. வ. நாகப்ப செட்டியாரவர்கள் தமது புதல்வனுக்கு நடைபெற்ற காப்புக் கட்டுப் புதுமையில் ரூ. ரு-ம் நமது திருக்கூட்டத்திற்குச் சம்பாவனை செய்தனுப்பியுள்ளார்கள். அதனை வந்தனத்துடன் பெற்றுக் கொண்டு நமது நன்றியைச் செலுத்துகிறோம்.

அழ. அருணாசலம், காரியதரிசி.

நியாயவாதி எழுதுகிறார்:—

கெடுவோன் கேடு நினைப்பான்.

இஃதொரு முதுரை. இதன் பொருளென்ன? கேடு நினைப்பவன் கெட்டு விடுவான் என்பதாகும். "மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின், அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு" என்றார், வள்ளுவனார். மறந்தேனும் ஒருவனுக்கொருவன் கேடு சூழ்ந்தால் கேடு சூழ்ந்தவனுக்கு சூழப்பட்டவன் திரும்பக் கேடு சூழட்டும் எனக் காத்துக் கொண்டிருக்க மாட்டாதாம் தரும தேவதை; உடனே கேடு சூழ்ந்த ஒருவனுக்குத்தருமதேவதை தானே கேடு சூழ்ந்து விடுமாம்.

எனவே, பிறன் ஒருவற்குக் கேடு சூழும்போதே தனக்கே கேடு சூழ்ந்து கொண்டவனாகிறான். இதனை—இந்நீதி வாக்கியங்கள், அறவுரைகள் கூறும் உண்மையினை, புராண இதிகாசங்களின் வாயிலாகப் படித்தறிகிறோம். அநேகர் பிறர்க்குக் கேடே சூழ்ந்து தாம் கெட்டுவிட்டனர். கேடு சூழப்பெற்றவர்களெல்லாம் கேடடையாது வாழ்ந்திருக்கின்றனர்.

இன்றும் அநுபவத்தில் பார்க்கின்றோம். கேடு செய்பவர் தாம் முடிவில் கெடுகிறார். இவற்றைஉணர்ந்தோ, தம் தீவினையினால் உணராமலோ அநேகர் பிறர்க்குக் கேடு செய்வதையே தனக்கு ஊதியமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அந்தோ! இவர்கள் அழிவிற்குஏன் இவர்களே காரணர்களாக விருக்கின்றனர்? நற்பிறவி யெய்திய மக்கள் நல்லன புரிந்து நற்பேற்றை யடையாது பிறன் கேடு சூழ்ந்து ஏன் அல்லற்பட்டு அழிய வேண்டும்? பிறன் கேடுசூழ்ந்ததால் எவ்வித நலனும் எவரேனும் அடைந்ததுண்டோ? அடையத்தான் முடியுமோ? இல்லையென்பது எவரும் கண்டதே. பிறன் "கேடுசூழ்தல் பேதைமதிதான்; அதனால் கெடுவது நாம் தான்" என்பதை அறிந்தேயிருக்கின்றனர்.

எனினும், தாம் பிறர்க்குக் கேடு சூழும்போது மறந்து விடுகிறார். சாதாரண மக்கள் ஒரு புறமிருக்க, பிறரை நல்வழிப் படுத்துதற்கென ஆங்காங்கு முழக்கிக்கொண்டு சிலர் முன் வருகின்றனரன்றோ? இவர்களினும் பிறன் கேடே தன் ஆக்கமெனக் கொண்டோரும் இருக்கக்காண்கின்றோம். பிறர்க்கு நீதியைப் போதிக்கின்றார்; ஏதேதோ சொல்கின்றார்; தான் சிறிதும் உணர்கின்றாரில்லை; சொல்கின்றரே யொழிய அதன்படி செய்கின்றாரில்லை. உலகத்தில் சொல்லும் செயலும் ஒத்திருப்போரைக் காண்டல் அரிதாகவே யிருக்கிறது. இன்றேல் "சொல்லுதல் யார்க்கும் எளிது அரியவாஞ் சொல்லிய வண்ணம் செயல்" என் வள்ளுவர் கூறியிருக்கமாட்டாரன்றோ?

காரணமென்ன:---வேஷதாரிகளே மிகுதி. பொதுநன்மைக்குழைக்கும் நல்லெண்ணமுடையோர்ஏன் பிறர்க்குக் கேடு சூழுகின்றனர் என்று எண்ணலாம். உண்மையில் எல்லோரும் நன்றாக வாழவேண்டுமென்ற ஓரே உத்தம எண்ணங்கொண்டோர் எவற்கும் கேடுசூழ எண்ணமாட்டார்தாம். இவ்வுலகை அப்படி நினைத்துவிட முடியவில்லை. ஒன்றைக் கருதி ஒன்று செய்வோரை எப்பொழுதும் நம்பமுடியாது. நிஷ்காமியமாக வேலை செய்வோர் எந்தக் கேடும் எவர்க்கும் செய்ய மாட்டார். ஒன்றற்காக வேலை செய்வோர் அதற்கு இடுக்கண் நேர்ந்துழி பிறன் கேடு முதலியன செய்யவே முந்துவர்.

பெயருக்காக ஒருவர் வேலை செய்கிறார். ஜனங்கள் உண்மையை உணர்ந்து கொண்டால் அதனை மறைக்கமனத்தில் ஏதேதோ சூழ்ச்சி செய்துகொண்டு பிறன் கேடு செய்ய முற்படுகிறார். அதனால், தான் அடையப் போகும் கேட்டைப்பற்றிய கவலை அவருக்கிருப்பதே யில்லை. "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதை அவருடைய பழவினை வந்து மறக்கச் செய்து விடுகின்றது.

பிறன் ஆக்கங்கொண்டு பொறுது அவனுக்குக் கேடு செய்ய முன் வருவோரும் இருக்கின்றனர். "அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம் பேணா தழுக்கறுப் பான்" என்ற குறள் இவர்கள் நினைவிற்கு வருவதே இல்லை போலும்!

கேடு செய்யும் பலர் தாமே கெட்டுவருவதைக் கண் கூடாகக் கண்டும் அதனை விடாது மேலும் புதிது புதிதாகச் செய்ய ஆரம்பிக்கின்றனர். இது சீட்டாடுபவர் கதையை ஒத்திருக்கின்றது. சீட்டாட்டத்தில் நஷ்டம் வருமானல் அவ்வளவோடு நிறுத்தமாட்டார்கள். போன நஷ்டத்தைத் திரும்பப் பெறுதற்கு திரும்பவும் திரும்பவும் ஆடுவார்கள். அநேகமாக மேலும் நஷ்டம் வந்துகொண்டே யிருக்கும். நஷ்டம் வந்தவுடன் [illegible] பொழிக்கமாட்டார்கள். இப்படியே கேடு செய்யும் விஷயத்திலும் பலிருந்து வருகின்றார். [illegible] கேடு தமக்கே வந்து [illegible] மேலும் மேலும் [illegible] அதிகமாக முற்படுகின்றனர். அதன் விளைவு [illegible] பதைச் சிந்திக்கின்றாரில்லை. [illegible] டாட்டத்திலாவது ஒருகால் [illegible] பம் வரினும் வருமென்று கூற இடமுண்டு. பிறன் கேடு சூழ்ந்தவன் வெற்றியடைந்தான் என்று எங்கும் கேட்டிலேம்.

கேடு சூழக் கனவிலும் கருதல் ஆகாது. ஆனால், மறந்து ஒருகால் கேடு சூழ ஆரம்பித்துவிட்டபோதினும் சிறிது காலத்தில் அதன் விளைவு தன்னையே திருப்பிக் கொள்வதைக் கண்டேனும் திருந்துதல் வேண்டாவோ? அழிவுகாலமிருப்பின் ஒன்றையும் எண்ண விடாது.

அப்பர் சுவாமிகளை நீற்றறையில் இட்டார்கள். அந்நீற்றறை, அடிகட்கு "மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றது." இதனை எண்ணியும் அடிகள் பெருமையை எண்ணிக் கேட்கட விட்டாரில்லைச் சமணர். "ஒரு நீற்றறையிலிட்டு ஒருவாரம் அடைத்துவைத்ததைக் காட்டினும் ஒருவர்க்கு வேறு என்ன பெரிய கேடு சூழமுடியும்? இக்கேட்டினின்றும் தப்பிய—இதினும் உய்த்த, ஒருவர்க்கு வேறு என்ன கேடு தாம் நாம் செய்ய முடியும்; எக்கேடும் அப்பெரியாரை என் செய்துவிடும்." என்பதைச் சிறிதும் உன்னாது, அவர்கள் அவலமதியால் அப்பெரியார் உயிர்தப்பியதற்கு வேறு காரணங்களைக் கற்பித்துப் பிற பல செய்தனர். நஞ்சூட்டினர்; யானையை இடரவிட்டார். கருங்கடலில் தள்ளினர். இன்ன பல சூழ்ச்சிகளும் சுவாமிகளை ஒன்றும் செய்திலசுவாமிகள் இவர்கட்கு எக்கேடும் செய்தாரிலர். முடிவில் கேடுசூழ்ந்தவர்கள் அழிந்தனர். இப்படிப் பல சரித்திரங்கள் உள. இவற்றை நன்றாக அறிந்தும் அநுபவத்திற் கண்டும் பிறன் கேடு சூழ்வதைப் பொருளெனக் கொண்டு அழிதல் ஆகுமோ? வேண்டாம்! வேண்டாம்!! விடையை வேண்டிய மனிதர்காள்! கேடு நினைத்து கெடுதல் வேண்டாம். நன்று நினைத்து நலம் பெற்றுய்யுங்கள்!

அடிகளின் அற்புதச்செய்கை.

("கிறிஸ்தியன் பத்திரிகை" கூறுகிறது.)

" வட இந்தியாவிலுள்ள ஒரு இருப்புப் பாதைச் சாவடியில் ஒரு கனவான் புகை வண்டியை விட்டிறங்கியவுடன், தமது சாமான்களை ஜட்காவண்டிக்குக் கொண்டு போக ஆள்தேடிக் காணுமையால் வருந்திக் கொண்டிருக்கும்போது, சிறிது தூரத்தில் வெள்ளைத் தலைப்பகையுடன் நின்றிருந்தவன் வந்து, தான் உதவுவதாகச் சொல்லிச் சாமான்களைத் தன் பின்னே எடுத்துக்கொண்டு வந்து வைத்தபின் அவனைக் கூலி யென்னவேண்டுமென்று அக் கனவான் கேட்க, அக் கூலி, தனக் கொன்றும் வேண்டாமென்று நின்று மரியாதையுடன் விலகிச் செல்லும்போது, கனவான் தமது சட்டைப் பையிலிருந்து சிறிது கௌரவமான கூலியையே எடுத்துக்கொடுக்க, அதனையும் அக் கூலி தனக் கொன்றும் வேண்டாமென்று மறுத்துச் சென்று விட்டனன். அக்கனவான் ஆச்சரிய முற்று, அவ்வுபகாரியைப் பற்றி விசாரித்தபோது, "அவர்தாம் மகாத்மா காந்தி" என்று அக்கனவான் தெரிந்து ஓடிச்சென்று, நடத்தெருவில் யாவருமறிய அம்மஹான் பாதத்தில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டனராம். பெருங்கிரள் கூடிவிட்டது. உடனே அக்கூலி யெங்கேயோ மறைந்துவிட்டனர். கிறிஸ்து வல்லாத மற்று யார் தாம் இத்தகைய பெருங்காரியத்தைச் செய்ய முற்படுவார்? அதனல்தான் மகாத்மா காந்தி கிறிஸ்து நாதருக்கு எப்போதும் ஒப்பிடப் படுகிறார்.

(௩ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பயத்தையே கொடுக்கும். இவற்றின் நிலைமையைக் குறைய வர்ணிக்க வேண்டுமாஞல் கம்பர் தான் வரவேண்டும் அன்றியும் இக்கட்டுரைக்குள் அதை அடக்கமுடியாது. அதற்குத் தனியே ஒரு கட்டுரை வரைதல் வேண்டும்.

இச்சாமான்களில் உபயோகப்படக்கூடாதது ஒருபுறம் போக, உபயோகிக்கத் தக்கதையும் உபயோகிப்பது கிடையாது. தனக்கு வைக்கப் பெற்ற சாமான்களைத் தன் மகளுக்கு வைக்கவும் மாட்டார்கள். அது ஒருபால் துருப்பிடித்துக் கிடக்கும். மகளுக்கு வைப்பதற்கு வேறு புதிதாகவே தயார் செய்வார்கள். முடிவில் சாமான்கள் அடையும் நிலை இன்னதென்பதை நாம் சொல்லவா வேண்டும்? மனிதர் சஞ்சாரமில்லாத அறைகளில் யாவும் குவிக்கப் பெற்றுப் பாழாகின்றன. உலகில் அறிவு வளர வளர நமது பெண்கட்கு சாமான் சேர்ப்பதில் அறிவு வளர்ந்து கொண்டே வருகிறது.

இது ஒன்று மாத்திரமல்ல; நமது சமூகத்தில் இந்நாள் நடக்குமயாவும் இத்தகையனவாகவே யிருக்கின்றன. இவைகளைத் தகர்த்தெறிய மிகத்தைர்யமாக முற்படல் வேண்டும்.

விகடர் விரிக்கிறார்:—

கோபுரந்தாங்கிய பதுமை.

இப்படி ஒரு பழமொழி யுண்டு. கோபுரத்தில் ஒட்டவைக்கப்பெற்றிருக்கும் பதுமை, கோபுரத்தைத் தான் தாங்குவதாக நினைத்துக்கொண்டதாம். இப்படிப் பலர் மனித உருவம் படைத்தவர்களுள்ளும் இருக்கின்றார்கள். கோபுரத்தில் பதுமை ஒட்டிக்கொண்டிருத்தல்போல் தான், உலகில் எல்லா மனிதர்களும் ஒவ்வொரு இயக்கத்திலும் ஒட்டிக் கொண்டிருக்கின்றனர். அந்தோ! இதனை மனிதர்உணர்கின்றனரில்லை. தங்களாலேயே யாவும் நடப்பதாக வெண்ணுகின்றனர்; பேசுகின்றனர்; எழுதுகின்றனர்; பிறவேதேதோ செய்கின்றனர். இதனை விடுத்தன்றன்றோ இவர்கள் புனிதமடைய முடியும்.

தம்மால் ஒன்று நடப்பதாக ஒருவர் எண்ணுதல் எவ்வளவு பெரிய அறியாமை! எந்த இயக்கத்தில் சேர்ந்த எவரும் இந்த ஆணவத்தை விட்டு நாம் சேர்ந்தாலும் சேராவிட்டாலும் நடப்பது நடக்கும் எனவன்றோ எண்ணுதல் வேண்டும். ஒவ்வொருவரும் அங்ஙனம் எண்ணிஞல் காரியம் செவ்வனே நடந்து செல்லும். இந்த நல்லெண்ணம் வரப்பெறாத மனிதர்கள் ஈடேறமாட்டார்கள்.

அநேகர் பொதுஜன இயக்கத்திற்கு உழைப்பதாக நடித்து நன்றாகப் பெயரை விளம்பரப்படுத்திக்கொள்கின்றனர். பிறகு தாம்சொல்வதை யாவரும் கேட்கவேண்டுமென்று விரும்புகின்றனர். அதற்குரிய சூழ்ச்சிகள் செய்கின்றனர். தாம் சொல்வதை எல்லோரும் கேட்டு நடக்காவிட்டால்உண்மையாளர்களைத் தூற்றுகின்றனர்; அஞ்சாது பொய்புகன்று வருகின்றனர்; மற்றும் செய்பத்தகாத பல செய்கின்றனர்.

இந்த நிலை நம் நாட்டில் எல்லா இயக்கத்திற்கும் ஏற்பட்டுவருகிறது. இப்பொழுது தேசீய இயக்கமும் இந்நிலையைத்தான் அடைந்து வருகிறது. அதினும் தமிழ் நாட்டில் போலிகள் சூழ்ச்சிகளெல்லாம் கிளம்ப ஆரம்பித்துவிட்டன.

நல்ல காரியம் எவர் முயற்சியினுலும் கெடாதென்பதுண்மையாயினும் கோபுரத்தைப் பதுமை தாங்கவில்லை யென்பதை எல்லோரும் உணர்ந்து நடப்பார்களாயின் நன்றாகவிருக்கும்.

மதுரைக் கோவில் கும்பாபிஷேகம்

ஆனிமீ ௩௨.

நிகழும் ஆனிமீ ௩௨ உதயாதி நாழிகை ௨-க்குமேல் ௩௩-க்குள் மதுரை ஸ்ரீ மீனம்பிகா சமேத ஸ்ரீ சோமசுந்தரேசுவரருக்கு அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறும். ஆனிமீ ௩௨ அநுஞ்ஞை, விக்நேசுவர பூஜை, தனபூஜை, வாஸ்து சாந்தியும், ௩௨ இரவு ௩௫ நாழிகைக்கு மேல் ௩௬-நாழிகைக்குள் கடஸ்தாபனமும், கும்பாபிஷேகத்தன்று இரவு திருவீதி பவனிவருதலும் நடைபெறும்.

பிரசுரிக்கப்படாதவை.

" வலைபபட்டி வலம்புரிநாத சுவாமி கோவில்" விஷயத்தின் கீழ் சொந்தப்பெயர் இல்லை; சண்டைக்குரிய விஷயம்; வசை மொழிகள் நிரம்பியிருக்கின்றன. "சரணிபதி அல்லது சந்திரகாந்தன்" இந்நாவலின் தொடர்ச்சி திரும்பவும் வந்திருக்கிறது; ௩அ-வது இதழ் கிடைக்கு முன்னரே இது எழுதியிருப்பார்கள் போலும்! "கவர்னர்வருவதேன்" கையெழுத்தேயில்லை, சொந்தக் கையெழுத்தை அடியிற் குறித்து எழுதுதல் வேண்டும்.

கதர்! கதர்!! கதர்!!!

குறைந்த விலை. சுத்தக்கதர்.

போலி விளம்பரமல்ல. ஒருமுறை எங்களிடம் நேரில் பரீக்ஷிப்பீர்களாஞல் உண்மை விளங்கும். காங்கிரஸ் பிரசாரத்திற்கென்றே விற்கும் கதர். காப்பியைத் தொலைக்கமுடியாதவர்கட்கு ஒருவித சுதேச பானத்தூளும் எங்களிடம் கிடைக்கும். அயலூர் ஆர்டர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும்.

மஹாத்மா காந்தி கதர் வஸ்திராலயம்.

பள்ளத்தூர்.

இராமநாதபுரம் ஜில்லா.

சம்பளமின்னியில்

கல்வி கற்பித்தல்.

புதுக்கோட்டைசமஸ்தானம் திருமயம் நேஷனல் ஸெகண்டரி பள்ளிக்கூடம் கோடை லீவிலிருந்து ஜூன் மாதம் ௨0வ திறக்கப்படும். ஷை பள்ளிக்கூடத்தில் சம்பளமன்னியில் கல்வி கற்பிக்கப்படும். சேருவதற்கான விண்ணப்பங்களை ஹெட்மாஸ்டருக்கு நாளிது ஜூலைமீ முதல் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

விளம்பரம்.

ஆச்சரியம்! ஆச்சரியம்!!

மாஜிக் பம்பரம்.

இந்தப் பம்பரத்துடன் அனுப்புகிற மனிதன் பாம்பு மீன் சக்கரம் முதலியவைகளை தரையில் சுத்தவிட்டு பம்பரத்தின் பக்கத்தில் வைத்தால் அவைகள் ஆடுவதும் நடனம் செய்வதும் ரொம்ப ஆச்சரியமாய் இருக்கும்.

காந்தி அன் கோ,

பள்ளத்தூர்.

விளம்பரம்

புதுக்கோட்டை சமஸ்தானம் மேலச்சிவற்பட்டியி லிருந்து தற்காலம் இரங்கோன் வந்திருக்கும் அ. நா. அ. அண்ணமலை செட்டியார் இதனல் சகலருக்கும் தெரியப் படுத்துவ தென்னவென்றால்:—

நானும் என் தகப்பனார் அ. நா. நாகப்ப செட்டியாரும் அவரின் இரண்டாம் தாரத்தின் புத்திரன் காலம்சென்ற ஆண்டியப்ப செட்டியாருக்காக ஷை மனைவி செல்லம்மை சம்மதத்தின்படி ஷையாள் நியமித்த ஷையாள் தகப்பனார் வேந்தன்பட்டி ஆரு. மு. பழ. முத்துப்பழனியப்ப செட்டியாரும் ஆக நாங்கள் மூவரும் பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்துகொண்டுள்ள பாகஉடன்படிக்கை முறிக்கு விரோதமாக எங்களுடைய நிலம் வீடு முதலிய சொத்துக்களை யாருடைய துற்போதனையாலோ என் தகப்பனார் விற்பனை செய்துவிட முயற்சிப்பதாக்க் கேள்விப் படுகிறேன். அவை உண்மையாஞல் எங்கள் அனுமதிக்கின்றி என் தகப்பனார் செய்யும் கிரய சாசனம் ஈடு கடன் வகையரு முதலிய செல்லா வென்பதையும் மீறியாரேனும் இதிற் பிரவேசித்து கிரயம் ஈடு முதலிய கடன் வகையரு இதற்குமுன் எழுதிவாங்கி யிருந்தாலும் இனிமேல் ஏழுதி வாங்கிஞலும் அதற்கு நாங்களும் யங்கள் சொத்து வகையருவும் பாத்திருப்படா வென்பதை இதன் மூலம் யாவருக்கும் எச்சரிக்கையாகத் தெரியப் படுத்தியிருக்கிறேன்.

அரு. வே. சோமசுந்தரம் செட்டியார்,

முந்துங்கள்! முந்துங்கள்!!

தனவைசிய ஊழியன்

ருத்ரோத்காரி வருஷத் தினசரி.

நமது சமூகத்துதித்த ஒவ்வொருவர் கையிலும் இன்றியமையாது இருந்து தீரவேண்டியது, நமது தினசரியாகும். எந்தத் தினசரியிலுமில்லாத விஷயங்கள் இதிலுள. இத்தினசரி யொன்று வாங்கிஞல் நம் ஜாதியில் ஆண் இத்தனை; பெண் இத்தனை; பிள்ளை இத்தனை; யென்பதை ஊர்வாரியாகவும் கோத்ரவாரியாகவும் விபரமாகக்காணலாம். நடப்புவட்டிகளும் வெறுபலவுமுண்டு.

தாமதமின்றி எழுதுக! உடனே அனுப்புவோம்.

விலை ரூ. ௧—0—0 தபாற்கூலி வேறு.

காரியஸ்தர்,

தனவைசிய ஊழியன அச்சுக்கூடம்.

காரைக்குடி.

தாய் நாடு.

இது ஓர் தேசிய வாரப் பத்திரிகை. திங்கட்கிழமைதோறும் வெளிவருவது. பிரபல கல்விமான்கள், தேசபக்தர்களால் ஆதரிக்கப் பெற்றது. பல பாஷைகளிலுள்ள நூல்களையும் மொழி பெயர்த்திடப் புகுவது. திருவாளர் மு வெங்கிடசாமி நாட்டார், வ. வெ. சு. அய்யர், பண்டித சிவராம் விஷாரத், சுந்திர வரதாச்சாரியார், சகோதரி வி. பாலம்மாள் முதலியவர் கட்டுரைகளை வாரந்தவறாது தாங்கி நிற்பது. எல்லாச் செய்திகளையும் கூறுவது. வாரந்தவறாது சித்திரப் படங்கள் காணப்படும்.

சந்தாதார்களைச் சேர்க்கவும், வெளியூர் விளம்பரங்கள் வாங்கி அனுப்பவும் ஏஜண்டுகள் எல்லா ஜில்லாக்களிலும், எல்லா ஊர்களிலும் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

		உள்நாடு.		வெளிநாடு.
வருட சந்தா	ரூ	ரு	0 0	௬ அ 0
ஆறமாத சந்தா	ரூ	௩	0 0	௩ ௧௨ 0

மானேஜர், தாய் நாடு ஆபீஸ்,

திருச்செங்கோடு.

தேவை! தேவை!!

ஏஜண்டுகள் தேவை.

மாதம் முப்பது ரூபாய் சம்பாதிக்கலாம்.

அரசியல் விஷயங்களையும், சுதந்தர தாகத்தைக் கிளப்பக்கூடிய வியாசங்களையும், அரிய செய்திகளையும் கொண்டு, தஞ்சை மாநகரில் வெளிவரும் வாரம் இருமுறை "ஸமரஸ போதினி" பத்திரிகைக்குப் புதுவருஷம்முதல் மாதச் சந்தா அணு பத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நகரிலும் சந்தாதாரர்கள் சேர்க்க அனுபவமுள்ள ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன். விவரத்திற்கு எழுதவும்.

மானேஜர், சமரஸபோதினி ஆபீஸ்,

தஞ்சாவூர்.

நோட்டீஸ்.

புதுக்கோட்டை சமஸ்தானம் திருமயம் தாலூகா குழிபிரையி லிருக்கும் யேகப்ப செட்டியார் குமாரர் யெ. சித. சிதம்பரஞ் செட்டியார் இதனுல் சகலமான ஜனங்களுக்கும் தெரிவிக்கிறதென்னவென்றால்:

என்க்கு ஆண்சந்ததியில்லாதிருப்பதை முன்னிட்டும் என்னுடைய இளைய சம்சாரம் ஏதாவது ஒரு பிள்ளையை வளர்க்க வேண்டுமென்ற ஆஸ்தையைப் பூர்த்தி செய்ய உத்தேசமாயும் சென்ற பரீதாபிஞு தைமீ ௩௦வ-யில் ஷ திருமயம் தாலூகா வாற்பட்டு வட்டம் வேந்தம்பட்டியிலிருக்கும் ஆ. லெக்ஷுமணன் செட்டியார் குமாரன் சோமன் செட்டியாரென்ற பையனை அபிமான புத்திரனுக எடுத்துக் கொண்டு அவன் என் சொல் கேட்டு ஒழுங்காய் நடந்து குடும்பத்துடன் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தால் என்னல் ஸ்வயார்ஜிதமாய்ச் சம்பாதிக்கப்பட்டு இச்சமஸ்தானத்திலும் இலங்கையிலும் என் ஸ்வாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிற சொத்தில் ஏதாவது எனக்கு இஷ்டமான பாகத்தை ஷ சோமனுக்கு கொடுத்து விவாஹம் முதலானது நடத்தி வைக்கிறதென்றும் ஷ என்னுடைய சொத்துக்களில் ஷ சோமனுக்கு எக்காலத்திலும் ஷ அபிமான புத்திரனென்ற ஹோதாவில் எவ்வித பாத்தியமும் உண்டாகக் கூடியதல்ல வென்றும் ஒப்பந்தம் பேசி முடித்துக் கொண்டு அது முதல் ஷ சோமன் என்னுடன் சிலகாலம் ஒத்துவாழ்ந்துவந்தான். அதைமுன்னிட்டு அவனுக்கு விவாஹமும் செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் திடீரென்று அவனுக்கு இப்பால் புத்தி ஸ்வாதீனமில்லாமல் துற்போதனைக் காரர்கள் பேச்சைக் கேட்டுத் தன மனைவியையும் என் இளைய மனைவியையும் கொடுமையாய் நடத்துவதுடன் ஸ்வாதீன புத்தியுள்ளவர்கள் செய்யக் கூடாத செய்கைகளையும் செய்து வருவதால் கிறுக்குச் சோமன் என்ற நாமதேயமும் ஷ யானுக்கு மற்ற ஜனங்களால் அளிக்கப்பட்டு அவ்விதம் வழங்கி வருகிறது. தவிரவும் சொற்ப காலமாக ஷ துற்போதனைக் காரர்கள் தூண்டுதலின்படி தனக்கு எவ்விதத்திலும் பாத்தியமில்லாத மேலே கண்ட என் ஸ்வயார்ஜித சொத்துக்களில் ஏதோ பாத்தியமிருப்பதுபோல் சொல்லிக்கொண்டு அக்கிரமமான பறுதீனங்கள்செய்ய எத்தனப்படுவதாயும் தெரியவருகிறது. அவ்விதஞ் செய்ய ஷ சோமனுக்குப் பாத்தியமில்லை. தன்னை நான் ஸ்வீகாரப் புத்திரனுகக் கூட்டிக் கொண்டதாய் ஷ யானும் அவனைச் சேர்ந்தவர்களும் சொல்லிக் கொண்டு வருவது சுத்தப் புரட்டு. ஜாதி வழக்கப்படி பிடித்துக் கொடுத்து வாங்கி ஸ்வீகாரப் பிள்ளையாக ஷ சோமனை நான் கூட்டிக் கொள்ளவில்லை, மேற்கண்ட நிபந்தனைக் குட்பட்டு ஷ சோமனை நான் என் இளைய மனைவியின் ஆஸ்தைக்காக அபிமான புத்திரனுக மட்டுந்தான் கூட்டிக்கொண்டேனே தவிற வேறல்ல. மேலேகண்ட ஸ்தலங்களிலுள்ள சொத்துக்கள் என்னுடைய பிதுரார்ஜிதமல்ல. பிதுரார்ஜித ஐவேஜியிலிருந்து விருத்தி செய்யப்பட்டதுமல்ல. இந் நிலைமையில் ஷ சோமன் கூறியாடுவது போல் ஸ்வீகாரப்புத்திரனுக விருந்தாலும்ஷஎன்னுடையசொத்துக்களில்ஷயானுக்குஎவ்விதபாத்தியமாவது சட்டப்படி கிடைக்க ஹேதுவில்லாதிருக்கிறது. உண்மையில் அபிமான புத்திரனை ஷ சோமனுக்கு யெக்காலத்திலும் யென்னுடைய சொத்துக்களில் யென் அபிப்பிராயமின்றி பாத்தியமாவது பாகமாவது கிடைக்காது.

ஆகையால் மேலே கண்ட இரண்டு ஊர்களிலுள்ளதும் யென்னுடைய ஸ்வாதீனத்திலும் அனுபவத்திலும் உள்ளதுமான ஸ்தாவர ஜங்கமங்களிலும் கொண்டு விலைகளிலும் வரவேண்டிய கொடுக்கவேண்டிய கடன்களிலும் தனக்கு பாகமிருப்பதுபோல் சொல்லிக்கொண்டு ஷ சோமனல் இனிமேல் செய்யப்படும் பறுதீனங்களாவது இதற்குமுன் செய்யப்பட்டிருக்கும் பறுதீனங்களாவது சட்டப்படி செல்லத்தக்கதில்லை யென்றும் ஷ பறுதீனங்களாவது ஷ சோமனல் வ ங்கப்பட்ட வெண்ணலைக்கடன்களாவது என்னையாவது யென் சொத்துக்களையாவது கட்டுப்படுத்தாதென்றும் இதனுல் சகலமான ஜனங்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

பெ. சித சிதம்பரஞ்செட்டியார்.

நோட்டீஸ்.

என்னுடைய ஜேஷ்டகுமாரன் பெரிய கருப்பன் என்ற சோமசுந்தரஞ் செட்டியார் சென்ற சுமாதமாக குடும்பத்தில் ஒற்றுமைஇல்லாமல்துன்மார்க்கர்களுடன் சேர்ந்துகொண்டு ஷ வழிகளில் பிரதிப்பிரயோஜனமில்லாத ஆதரவுகள் ஏற்படுத்தி வருவதாகத் தெரிகிறது. ஷ யானுக்கு கடன் வாங்கவேண்டிய அவசியமில்லை. ஷ யாளிடம் ஏற்படுத்தியிருக்கும் அல்லது ஏற்படும் தஸ்தாவேஜுகள் என்னையாவது என்னுடைய மற்ற மக்களையாவது குடும்பச் சொத்துக்களையாவது எவ்விதத்திலும் பாத்தியப்படுத்தத்தக்கதில்லை என்று தெரிவிக்கலாயிற்று.

மு. ப. வ. வள்ளியப்புசெட்டியார்.
ராங்கியம்

சந்தா விபரம்.

இந்தியா முதலிய உள்நாடுகளுக்கு வருஷம் ஒன்றுக்கு ...	௫—௦—௦
சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு வருஷம் ஒன்றுக்கு	௬—௦—௦
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	௦—௨—௦

விளம்பர விவரம்.

மாதம் ௧-க்கு பத்தி ௧-க்கு...	௨௫—௦—௦
டிெ அரைப்பத்திக்கு...	௧௫—௦—௦

காரியஸ்தர்,
தனவைசிய ஊழியன் ஆலயம்,
காரைக்குடி.

ராய. சொக்கலிங்கத்தால் காரைக்குடி தனவைசிய ஊழியன் அச்சியந்திரசாலையில்
அச்சிடப்பெற்றுப் பிரசுரம் செய்யப்பெற்றது.

END OF
ISSUE